# வைப்பகம்

2024 ஒத்தோபர் - திசெம்பர் மலர் 8 இதழ் 10 - 12

அறிவுத் தேடலின் மையம்

ரூ. 80/-

02 இணையவழிப் பாதுகாப்பில் ஒத்துழைப்பையும் அறிவையும் பகிர்ந்துகொள்ளுதல்

08 நிதியியல் துறையில் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் இன்றியமையாத வகிபாகம்

22 உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஏற்புடைய சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்தல்: வங்கித்தொழில் சட்டத்திற்கான திருத்தங்கள்

28 விதிகளுக்கேற்ப செயற்படுதல்: இறைசார் நிலைபெறுதன்மைக்கான எண்ணியல்சார் விதிகள்

ISSN 2513-3012

இக்கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் எழுத்தாளர்களின் கருத்துக்களேயன்றி அவை இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை

இலங்கை மத்திய வங்கி
தொடர்பூட்டல் திணைக்களம்



# இணையவழிப் பாதுகாப்பில் ஒத்துழைப்பையும் அறிவையும் பகிர்ந்துகொள்ளுதல்

**எஸ் பி ஈ எஸ் ஜயரத்ன,** முகாமைத்துவ உதவியாளர் (மூத்த), வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம்

## 1. அறிமுகம்

“இணையவழி” என்ற சொல்லின் அர்த்தம் “கணனிகள் அல்லது கணனி வலையமைப்புக்கள் (இணையத்தளம்) தொடர்பானது” என்பதாகும். ஆகவே, இணையவழிப் பாதுகாப்பு என்பது உங்கள் கணனியினையும் கணனியிலுள்ள தகவல்களையும் தீங்கிழைக்கும் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பது என எளிதாக குறிப்பிடப்படுகிறது. இணையவழிப் பாதுகாப்பு இல்லாமை காரணமாக கணனியிலுள்ள தரவுகளை அழிந்துவிடமுடியும், மாற்றியமைக்கமுடியும், அல்லது திருடமுடியும். இணையவழிப் பாதுகாப்பு என்பது, தகவல் தொழில்நுட்பச் சொத்துக்களை தாக்குதல்களிலிருந்து, சேதங்களிலிருந்து அல்லது தொழில்நுட்பவியல் தீர்வுகள் அதேபோன்று தொழில்நுட்பவியல் அல்லாத சிறந்த நடைமுறைகளினூடாக அதிகாரமற்ற விதத்தில் அணுகுவதிலிருந்து பாதுகாப்பதற்கானதொரு முயற்சியாகும்.

இணையவழிப் பாதுகாப்பானது நிறுவனமொன்றிலுள்ள ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். இணையவழிப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வானது கலாச்சாரம், நடத்தை மற்றும் ஒழுக்கவியலை மாற்றிக்கொள்வதன் மூலம் நிறுவன ரீதியானதும் தனிப்பட்ட ரீதியானதுமான இடர்நேர்வுகளைக் குறைக்கிறது. இது தற்போதைய தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதிலுள்ள இடர்நேர்வினைப் புரிந்துகொள்வதற்கும் வேலைத்தலத்திலும் வீட்டிலும் கணனி வலையமைப்பிற்கு ஏற்படும் அச்சுறுத்தல்களுக்கெதிராக காத்திரமான விதத்தில் பாதுகாத்துக்கொள்வதற்கும் உதவுகிறது.

கணனி ஊடுருவல்கள், நிதியியல் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளவதற்காக, பொழுதுபோக்காக, பழிவாங்கலாக, தகவல்களைக் கசியவிடுவதற்காக அரசியல் ரீதியான அல்லது சமூக ரீதியான உள்நோக்கங்களுக்காக மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக இடம்பெறுகின்றன.

இலங்கையிலும் பார்க்க பாகிஸ்தான் கூடுதலான இணையவழிப் பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்நோக்குகிறது.

### பிரபல்யமான இணையவழித் தாக்குதல்கள்

வங்காளதேசத்திலுள்ள வங்காளாதேச வங்கியில் இடம்பெற்ற சம்பவமொன்றில் ஊடுருவியோர் பரிமாற்றலுக்கான அவர்களது

கோரிக்கையில் “Foundation” என்ற சொல்லிற்குப் பதிலாக “Fundation” என பிழையாக எழுதியிருந்தனர். இவ்வாறு எழுத்துப்பிழையாக எழுதப்பட்டமையானது அனுப்பும் வங்கியான டொச் வங்கிக்கு சந்தேகத்தினை ஏற்படுத்தியது. இவ்வங்கி வங்களாதேச வங்கியிடமிருந்து தெளிவுபடுத்தல்களைக் கோரியதன் பின்னர் வினாக்களை கோரியதன் மூலமாக கொடுக்கல்வாங்கல்களை நிறுத்திக்கொண்டது.

ஈரானில், 2010 யூனில் ஸ்ரக்ஸ்நெட் என்ற கணனி வைரஸ் ஒன்று கண்டறியப்பட்டது. ஆரம்பத்தில் மைக்ரோ சொப்ற் வின்டோ ஊடாகப் பரவிய இது சீமென் தொழிற்துறையின் மென்பொருட்களையும் சாதனங்களையும் இலக்காகக் கொண்டிருந்தது. அதன்பின்னர், இது, அணுசக்தி பொறித்தொகுதியின் தொழிற்பாட்டிணைக்கூட கட்டுப்படுத்தும் நிலைக்கு வளர்ந்தது.

2014 நவெம்பர் 24 அன்று “சமாதானத்தின் பாதுகாவலர்கள்”என தம்மைத்தாமே அடையாளப்படுத்திக்கொண்ட ஊடுருவல் குழுவொன்று சொனி பிக்சர்ஸ் பட ஸ்டூடியோவிலிருந்து இரகசியத்தகவல்களை கசியச் செய்தது. இத்தரவுகள், சொனி பிக்சர்ஸ் இன் ஊழியர்களினதும் அவர்களது குழுக்களினதும் தனிப்பட்ட தகவல்கள், ஊழியர்களுக்கிடையிலான மின்னஞ்சல்கள், கம்பனியிலுள்ள நிறைவேற்று அலுவலர்களின் சம்பளங்கள் பற்றிய தகவல்கள் சொனி பிக்சர்ஸின் வெளியிடப்படாத படங்களின் பிரதிகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இத்தாக்குதலுடன் வடகொரியா அரசாங்கம் தொடர்புபட்டிருக்கின்றதென்றும் வடகொரிய தலைவர் கிம் ஜொங் இன் அட்டூழியங்களை எடுத்துக்காட்டும் அவருக்கெதிரான கொலை முயற்சியை மையமாகக் கொண்ட “நேர்காணல்” என்ற நகைச்சுவை கலந்த சண்டைப் படம் தொடர்பில் இடம்பெற்றதொன்று என்றும் பல்வேறு அறிக்கைகளும் தெரிவித்தன.

இணையவழி பாதுகாப்பினை மீறிய குறிப்பிடத்தக்க ஏனைய விடயங்களாக ஊபர், ஈகுயிக்ஸ், யாகூ மற்றும் லிங்டின் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

**ஊபர்:** 2016இல் 57 மில்லியன் பயன்படுத்துனர்களின் கணக்குகளில் ஊடுருவல் மேற்கொள்ளப்பட்டது. களவாடப்பட்ட தரவுகளை அழித்துவிடுவதற்காக ஊபர் இரண்டு ஊடுருவலாளர்களுக்கு கொடுப்பனவுகளைச் செலுத்தியது. ஊபரின் முதன்மைப் பாதுகாப்பு அலுவலர் ஜோ. சுல்லிவன் மற்றும் அவரது பதில் பாதுகாப்பு அலுவலர் ஆகியோர் விலகுவதற்கு வழிவகுத்தது. கம்பனியின் பெறுமதி 30 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**ஈகுய்வக்ஸ்:** (வாடிக்கையாளரின் நம்பகத்தன்மையினை தரமிடுகின்ற முகவர்): 143 மில்லியன் தனிப்பட்டவர்களின் தகவல்கள் ஊடுருவப்பட்டன. கசியவிடப்பட்ட தரவுகள் பெயர்கள், சமூகப் பாதுகாப்பு இலக்கங்கள், பிறப்புத் திகதி, முகவரி மற்றும் ஓட்டுநர் உரிமப்பத்திர இலக்கங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இச்செய்தி பரவத்தொடங்கியதும் முதன்மை நிறைவேற்று அலுவலர், முதன்மை தகவல் அலுவலர், முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் ஆகியோர் உடனடியாக பதவி விலகியதுடன் பங்குகளின் விலைகள் ஒரு வாரத்திற்குள் 35 சதவீதத்தினால் மோசமாக வீழ்ச்சிகண்டன. 2017இன் மூன்றாம் காலாண்டில் இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 27 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டதுடன் இம்மீறல் தொடர்பில் 87 மில்லியன் டொலர் செலவு ஏற்பட்டது.

**யாகூ:** 2013இல் 3 பில்லியன் பயன்படுத்துனர் கணக்குகள் ஊடுருவப்பட்டன. 2017 ஒத்தோபர் வரை எண்ணிக்கை வெளிப்படுத்தப்படவில்லை. சேதம் தொடர்பில் யாகூ 41 வகுப்பு சட்ட நடவடிக்கைகளை எதிர்நோக்கியது.

**லிங்டின்:** 2012இல் 117 மில்லியன் பயன்படுத்துநர் கணக்குகள் ஊடுருவப்பட்டன. மீறல்களின் அளவு 6.5 மில்லியன் என முதலில் அறிவிக்கப்பட்டது. உண்மையான எண்ணிக்கை, ரஷ்யாவின் ஊடுருவலாளர் 2016இல் சட்டத்திற்குமாறான பொருட்களை விற்கும் சந்தையான இருண்ட வெப் சந்தையில் பிற்கொயினுக்காக 117 மில்லியன் மின்னஞ்சல்களையும் கடவுச்சொற்களையும் விற்பனை செய்யத்தொடங்கியதன் பின்பே கண்டறியப்பட்டது. பயன்படுத்துநர்களின் தரவுகளை பாதுகாக்கத் தவறியமைக்கெதிராக லிங்டின் ஆரம்ப பயன்படுத்துநர்களின் குழுவொன்றினால் வகுப்பு சட்ட நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டமை சேதமாக அமைந்தது.

2018இல் முகப்பு நூல், கம்பனியின் வரலாற்றிலேயே மிகப்பெரிய மீறலொன்றினை அறிவித்தது. இம்மீறலானது ஊடுருவலாளர்கள் அவர்களது கணக்குகளை எடுத்துக்கொள்ள அனுமதித்ததன் மூலம் ஏறத்தாள 50 மில்லியன் பயன்படுத்துநர்கள் பாதிக்கப்பட்டனர்.

2015இல் உக்ரேனின் பல பகுதிகள் இருளில் மூழ்கின. 3 வலு விநியோக கம்பனிகளின் தகவல் முறைமைகள் பாதிக்கப்பட்டன. ஊடுருவியோர் வலு விநியோகக் கம்பனிகளை ஊடுருவுவதற்கு தந்திரமாக ஏமாற்றும் மின்னஞ்சல் முறைமையினை பயன்படுத்தியிருந்தனர்.

பாதுகாப்பு பாதிக்கப்பட்டமைக்கான காரணங்களாக பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு போதாமை, மனித வழுக்கள், தீங்கிழைக்கக்கூடிய/ திருடப்பட்ட மென்பொருட்கள் தொலைந்த/ களவாடப்பட்ட கணனிகள், அதிருப்தி கொண்ட ஊழியர்கள் மற்றும் போதுமானதற்ற நிதியிடல் என்பன காணப்பட்டன.

## இணையவழி தாக்குதல் வகைகள் மற்றும் அவற்றை எவ்வாறு தவிர்ப்பது

சமூகம் சார்ந்த பொறியியற்படுத்தல், தந்திரமாக ஏமாற்றுதல், தீங்கிழைக்கும் மென்பொருள், கடவுச் சொற்களில் விரிசலை ஏற்படுத்தல், கம்பியில்லாமல் அணுகும் தன்மை, அடையாளத்தினை களவாடுதல், உள்ளிருப்பவர்களின் அச்சுறுத்தல் மற்றும் தீனிரல் மென்பொருள் என்பனவற்றினை முக்கியமான பாதுகாப்பு அச்சுறுத்தல்களாகவும் தாக்குதல்களாகவும் அடையாளம் காணமுடியும்.

### சமூகப் பொறியியற்படுத்தல்

கம்பனியொன்று பல்லாயிரக் கணக்கான டொலர்களை கணனி பாதுகாப்பு அரண், கண்டறியும் முறைமைகள் மற்றும் ஏனைய பாதுகாப்பு தொழில்நுட்பங்களின் மீது செலவிடுகின்றது. எனினும், தாக்குதல் தொடுக்குமொருவர் கம்பனிக்குள்ளே உள்ள ஒரு நம்பிக்கையாளரைத் தொடர்புகொண்டு, அவ்வாளினை தாக்குதலை மேற்கொள்வதற்கு இணங்கச் செய்வாராயின் தொழில்நுட்பத்தின் மீது செலவிடப்பட்ட அனைத்து பணமும் வீணாகிவிடும்.

சமூக பொறியியல்படுத்தல் என்பது ஏமாற்று வழிமுறைகளின் மூலமும் சூசகமாக ஆட்களை கையாள்வதன் மூலமும் உணர்திறன் மிக்க/இரகசியத்தகவல்களை பெற்றுக்கொள்ள அவர்களை இணங்கச்செய்யும் ஒரு கலையாகும். குற்றவாளிகள் மக்களை அவர்கள் தகவல்களை வெளிப்படுத்தச் செய்வதன் மூலமும் தீங்குபயக்கும் மென்பொருட்களை பதிவிறக்கம் செய்வதன் மூலமும் அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதன் மூலமும் அவர்களை ஏமாற்ற முயற்சிக்கின்றனர். சில சமயங்களில் அவர்களை ஊடுருவதிலும் பார்க்க அவர்களது கடவுச்சொற்களை வழங்கச்செய்வதன் மூலம் இலகுவாக முட்டாள்களாக்கிவிடுகின்றனர்.

### தொலைபேசி மூலமாக ஏமாற்றும் தாக்குதல் (Vishing Attacks)

தொலைபேசி மூலமாக ஏமாற்றுதல் என்பது தொலைபேசி மூலமான ஒரு வகை ஏமாற்றுதலாகும். இது, அடையாளங்களை களவாடுவதற்காக பயன்படுத்தப்படக்கூடிய தனிப்பட்ட தகவல்களினைக் கொண்டுள்ள பயன்படுத்துநர்களை மோசடி செய்வதற்கு முயற்சிக்கின்ற விதத்தில் தொலைபேசிகளை பயன்படுத்துகின்ற நடவடிக்கை என விபரிக்கப்படுகின்றது.

தந்திரமாக மோசம் செய்கின்ற தாக்குதல்களை தவிர்ப்பதற்கு உங்களுக்கு சில ஆலோசனைகள் இங்கே தரப்படுகின்றன. நீங்கள் பேசுவதற்கு முன்னர் சிந்தியுங்கள். மோசடியாளர்கள் நீங்கள் செயற்பட்டு தகவல்களை வழங்கவேண்டுமென விரும்புவர். தன்னியக்கப்படுத்தப்பட்ட அழைப்புக்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளுங்கள் அழைக்கப்படுபவரின் அடையாளத்தினை ஏமாற்றுக்காரர்களினால் இலகுவாக வஞ்சித்துக்கொள்ளமுடியும் என்பது தொடர்பில் கவனமாக இருங்கள். கதைப்பதற்கு முன்னர் தொலைபேசி இலக்கத்தினை சரிபார்த்துக்கொள்வதுடன் தெரியாத இலக்கங்களுக்கு பதிலளிக்காதிருப்பதே சிறந்ததாகும். மீண்டும் அழைப்பதற்கு வேறு தொலைபேசியை பயன்படுத்தவும். தொலைபேசி அழைப்புக்களின் போது உங்கள் அட்டை தொடர்பான விபரங்களை, தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு ஆதாரச் சான்றுகளை பகிர்ந்துகொள்ள வேண்டாம். மேலும், இனிமையான வார்த்தைகளை நம்பவேண்டாம் என்பதுடன் தேவையான போது தடைசெய்யும் செயலியையும் பயன்படுத்தவும்.

### தந்திரமாக ஏமாற்றும் தாக்குதல்கள் (Phishing Attacks)

தந்திரமாக ஏமாற்றுதல் என்பது பயன்படுத்துனரின் பெயர், கடவுச்சொல் மற்றும் நிதியியல் தரவுகள் (பற்று/ வரவு அட்டைத் தகவல்கள் போன்றவை) போன்ற உணர்திறன் மிக்க தகவல்களை அபகரிப்பதற்கான சட்டத்திற்குமாறான முயற்சியொன்றாகும். ஏமாற்றும் இலத்திரனியல் தொடர்பூட்டலொன்றின் மூலம் நம்பிக்கை நிறைந்த நிறுவனங்களை ஆள்மாறாட்டம் செய்வதன் மூலமாக தீங்கிழைக்கும் காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுகிறது. இலத்திரனியல் தொடர்பூட்டலொன்றின் மூலம் நம்பிக்கை நிறைந்த நிறுவனங்களை ஆள்மாறாட்டம் செய்வதன் மூலமாக தீங்கிழைக்கும் காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுகிறது. அழுத்துவதற்கு முன்னதாக சிந்தியுங்கள். பேராசை, அச்சம், ஆர்வம், அனுதாபம் மற்றும் அதிகாரம் தொடர்பான விடயங்கள் என்பன ஏமாற்றுதலைத் தூண்டுகின்ற விடயங்களாக காணப்படுகின்றன.

மனித அசிரத்தைகளை மூடிமறைப்பதற்கான வழி எதுவுமில்லை.

### தீங்கிழைக்கும் மென்பொருள் (Malware)

இது "malicious software" என்பதன் சுருக்கப்பட்ட சொற்பதமாகும். இதன் கருத்துயாதெனில் "தீங்கிழைக்கும் மென்பொருள்" என்பதாகும். இது உரிமையாளருக்கு தெரியாமலேயே கணனியை சேதப்படுத்திவிடுகிறது. இதன் கருத்து யாதெனில் கணனித் தொழிற்பாடுகள், உணர்திறன்மிக்க தகவல்கள் ஒன்று சேர்க்கப்படுவதனை மற்றும் கணனியினை அணுகும் வசதிகளை இடையூறுகளுக்குள்ளாகிவிடுகிறது என்பதாகும். மூலங்கள் பற்றி சரியான முறையில் பரிசோதிக்காமல் கோப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் பதிவிறக்கம் செய்தல்,

தொற்றுமிக்க மின்னஞ்சல் இணைப்புக்களைத் திறத்தல், திருடப்பட்ட மென்பொருளை இணைத்தல், புதிய பதிப்புக்களை/ இற்றைப்படுத்தல்களை இற்றைப்படுத்தாமல் அல்லது நிறுவாமல்விடுதல், அண்மிய/ இற்றைப்படுத்தப்பட்ட தீங்கிழைக்கும் மென்பொருளுக்கெதிரான செய்நிரலாக்கல்களை மேற்கொள்ளாமை என்பன கணனி தொற்றுக்குள்ளாவதற்கான காரணங்களாக விளங்குகின்றன.

தீங்கிழைக்கும் மென்பொருள் தாக்குதலானது வழமைக்கு மாறான கணனியின் நடத்தைகள், மெதுவான செயலாற்றம், கணனி அடிக்கடி முடக்கப்படுதல், கோப்புக்களுக்கும் மடிப்புக்களும் காணாமல் போய்விடுதல், அறியப்படாத கோப்புக்குள்/மடிப்புக்கள் தோன்றுதல், தொற்றுக்களுக்கெதிரான போலியான எச்சரிக்கைகள், இயக்கி லேபள், கோப்புக்களின் பெயர்கள் மற்றும் கோப்புக்களின் அளவுகள் போன்றவை மாற்றப்படுதல் என்பனவற்றை எடுத்துக்காட்டும்.

தொற்றிற்கெதிரான நடவடிக்கைகளை நிறுத்திவிடும்பொழுது, அது போலியான தொற்றிற்கெதிரான எச்சரிக்கைகளை விடுக்கும், கடவுச்சொல் தொழிற்படாது போகும், சமூக வலைத்தளங்களிலுள்ள நண்பர்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கும், கணனித்திரையில் புதிய வடிவங்களின் பிம்பம் தோன்றும், இடச்சுட்டி தானாகவே நகரும், வேறுபட்ட வெப்தளங்கள் மீள நெறிப்படுத்தப்படும், மடிப்புக்களும் கோப்புக்களும் காணாமல் போகும், நீங்கள் பதிவேற்றம் செய்யாத போதும் தனிப்பட்ட தரவுகள் இணையத்தளத்தில் வலம்வரும், வெப்கமராவின் வழமைக்குமாறான செயற்பாடுகள் மற்றும் கணனி மெதுவாக தொழிற்படுதல் என்பனவற்றிற்கு வழிவகுக்கும்.

தீங்கிழைக்கின்ற மென்பொருட்கள் காணப்படும் பொழுது, முதலில் நீங்கள் நம்பகமான தொற்றுநீக்கியை பொருத்துவதுடன் ஸ்கான் செய்தலும் வேண்டும். வழமைக்கு மாறான செய்நிரலாக்கல் அனைத்தையும் அழித்துவிடல் வேண்டும். அனைத்து கணக்குகளினது கடவுச்சொற்களையும் மாற்றுதல் வேண்டும் என்பதுடன் தொடர்பான அதிகாரசபைகளிலுள்ள தகவல் தொழில்நுட்பத்தில் விசேடத்துவம் பெற்றவரிடம் அறிக்கையிடுதலும் வேண்டும்.

### கடவுச்சொல்லில் விரிசல் (Password Cracking)

கணனி முறைமைகளிலிருந்து உணர்திறன் மிக்க தரவுகளை, நிதியியல் தகவல்களை, அல்லது தனிப்பட்ட கணக்குகளை அணுகுவதற்கான நோக்கங்களிலிருந்து கடவுச்சொற்களை மீட்டுக்கொள்வதற்காக கடவுச்சொல்லை விரிசல்படுத்தும் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. விசைபுகுபதிகைகள், கடவுச்சொற்களை ஊகித்தல், தந்திரமாக ஏமாற்றுதல், கணனியை தொழிற்படுத்துவதற்கு பின்னாலிருந்து கொண்டு உணர்திறன் கொண்ட தகவல்களை அறிந்துகொள்ளுதல், சமூக பொறியியற்படுத்தல், மற்றும் நிர்ப்பந்த முறையினூடாக/ அகராதி முறையிலான தாக்குதல் என்பன கடவுச்சொற்களை விரிசல்படுத்துவதற்கு பெருமளவிற்கு பயன்படுத்தப்படும் முறைகளாகும்.

கடவுச்சொற்கள் பலவீனமான அல்லது சுலபமான ஊகிக்கத்தக்க கடவுச்சொற்களாக இருப்பதன் காரணமாக பெரும்பாலான தாக்குதல்கள் வெற்றிகரமாக அமைகின்றன. பாதுகாப்பான கடவுச்சொற்களை உருவாக்கும் போது கடவுச்சொற்களுக்கு எப்பொழுதும் தனித்துவமான, நீண்டதும் வலுவானதுமான/ சிக்கலான, எழுத்துக்கள், இலக்கங்கள் மற்றும் விசேட எழுத்துருக்கள் (*, %, @, #, $, ^) இணைந்த குறைந்தபட்சம் 8 எழுத்துக்களிலான கடவுச்சொல்லை உருவாக்குதல் வேண்டும். சுலபமாக நினைவில் வைத்துக்கொள்ளக்கூடியதும் முன்னையதிலிருந்து கணிசமமானளவிற்கு வேறுபட்டதுமான கடவுச்சொற்களை பயன்படுத்துதல் வேண்டும். வேறுபட்ட கணக்குகளுக்கு வேறுபட்ட கடவுச்சொற்களை பயன்படுத்தவும். கடவுச்சொற்களை கிரமமாக மாற்றுவதனை கொள்கையாகக் கொண்டிருத்தல் வேண்டும். பாதிக்கப்படுவது தொடர்பில் சந்தேகம் ஏற்படும் போதெல்லாம் கடவுச்சொற்களை மாற்றுதல் வேண்டும். முயற்சி பல தடவை தோல்வியடையும் போது கணக்குகளை முடக்கவும்.

### அடையாளத்தினைக் களவாடுதல் (Identity Theft)

அடையாளத்தினை களவாடுதல் என்பது இன்னொருவரின் அடையாளத்தினை வேண்டுமென்றே பயன்படுத்திக்கொள்வதாகும். மற்றையவர்களின் தனிப்பட்ட மற்றும் நிதியியல் தரவுகளை திருடுதல், மற்றையவர்களுடையதாக இருக்கும் என பாசாங்கு செய்துகொண்டு நன்மைகளை பெறுதல், பொதுவாக நிதியியல் நன்மைகளுக்காக மோசடி அல்லது ஏமாற்றலுடன் தொடர்பான வழிகளில் மற்றொரு ஆளின் தனிப்பட்ட அல்லது நிதியியல் தரவுகளை பிழையான விதத்தில் பெற்றுக்கொண்டு அதனைப் பயன்படுத்திக்கொள்ளுதல் என்பன இதில் அடங்கும்.

அடையாளத்தினைக் களவாடுதல் என்பது இன்னொருவரின் அடையாளம் தொடர்பான தகவல்களை திருடிக்கொள்வது மற்றும் அத்தகைய தகவல்களை தாக்குதலை மேற்கொள்பவரின் இலக்குகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக, களவாடுதல் மற்றும் குற்றம்புரியும் முயற்சிகள் (உ-ம் பதிவுசெய்வதற்கு மற்றொருவரின் தேசிய அடையாள அட்டையினை பயன்படுத்துவது) போன்ற மோசடியான நோக்கங்களுக்காக தவறாகப் பயன்படுத்திக்கொள்ளும் செய்முறையொன்றாகும்.

நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கை பற்றியும், நீங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு தேடல் பற்றியும், நீங்கள் சொல்லும் ஒவ்வொரு சொல்பற்றியும் நீங்கள் பார்க்கும் நிறுத்தி தெரிவுகள், நீங்கள் பார்க்கின்ற துணுக்குகள் மற்றும் நீங்கள் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு செயலிகள் பற்றியும் கூகில் தெரிந்து வைத்திருக்கிறது.

இடர்நேர்வுகளை குறைத்துக் கொள்வதற்கு வேலைத்தலத்திலும் வீட்டிலும் தனிப்பட்ட தகவல்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். நிதியியல் கணக்குகள், வங்கிக் கூற்றுக்கள் மற்றும் கடன் அறிக்கைகளை கிரமமாக மீளாய்வு செய்து கொள்ளுங்கள். இரகசியமான ஆவணங்களை பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள் அல்லது அழித்துவிடுங்கள், உறுதிப்படுத்தப்படாத கோரிக்கைகளுக்கு பதிலிறுத்தாதீர்கள், உணர்திறன் மிக்க தகவல்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள், பட்டியல் சுழற்சியின் மீது கவனம் செலுத்துங்கள், அஞ்சல்களைச் சேகரித்துக்கொள்வதுடன் தொற்றிற்கு எதிரான செயற்பாடுகளையும் பாதுகாப்பு அரண்களையும் சரியாக பயன்படுத்திக்கொள்ளுங்கள். உங்களது தனிப்பட்ட தகவல்களை மற்றையவர்களுக்கு ஒரு போதும் வழங்காதீர்கள் அத்துடன் தேவையற்ற மின்னஞ்சல் தொடர்புகளை நிறுத்துங்கள்.

### தன்னியக்கக்கூற்றுப்பொறி தகவல்களை அறிதல் (ATM Skimming)

தன்னியக்கக்கூற்றுப் பொறி தகவல்களை அறிதல் என்பது மறைவாக பதிவுசெய்யும் சாதனங்களின் உதவியுடன் ஏமாற்றும் எந்திரங்களின் மூலம் கடன் அட்டை மற்றும் பற்று அட்டைகளிலுள்ள தனிப்பட்ட அடையாள இலக்கத்தினையும் ஏனைய தகவல்களையும் திருடிக்கொள்கின்ற வழியாகும்.

2018 ஒத்தோபர் 27ஆம் நாளன்று பாகிஸ்தானிலுள்ள இஸ்லாமி வங்கியின் வாடிக்கையாளர்கள் அவர்களது கொடுப்பனவு அட்டைகளிலிருந்து கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பது தொடர்பாக தன்னியக்கச் செய்திகளைப் பெற்றனர். பணமானது ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஏனைய நாடுகளிலுள்ள வெவ்வேறு இடங்களிலிருந்து எடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இஸ்லாமி வங்கி வாடிக்கையாளர் கணக்குகளிலிருந்து எடுப்பனவு செய்யப்பட்ட ஒட்டுமொத்த நிதியும் (அதாவது ரூ.2.6 மில்லியன்) மீள வழங்கப்பட்டிருப்பதாக அதன் சுற்றறிக்கை மூலமாக தெரிவித்தது. எது எவ்வாறெனினும் தன்னியக்கக்கூற்றுப் பொறியிலிருந்தான தகவல் சமூக பொறியியற்படுத்தல் மற்றும் முறைமை மீறப்பட்டமை (ஊடுருவுவோர் வங்கியின் பாதுகாப்பு முறைமைக்கு நுழைந்தமை) என்பன இதற்கான சில காரணங்களாக இருக்கும்.

தன்னியக்கக்கூற்றுப் பொறிகளில் தகல்களைப் பெறும் சாதனங்களை பொருத்தியமை தொடர்பான குற்றச்சாட்டில் இரண்டு சீனர்கள் கராய்ச்சியில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். பாகிஸ்தானில் தன்னியக்கக்கூற்றுப் பொறிகளை ஊடுருவுவதற்காக சிலர் முயற்சித்த முதலாவது சந்தர்ப்பம் இதுவல்ல. கடந்த ஆண்டு ஹபீப் பாங் லிமிடெட், 559 இற்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களின் கணக்குகள் ஊடுருவலாளர்களினால் ஊடுருவப்பட்டதாகவும் அவர்களிடமிருந்து ரூ.10 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை களவாடப்பட்டதாகவும் அறிவித்தது.

உதாரணமாக, அட்டைகளின் தகவல்களை பெற்றுக்கொள்ளும் விதத்தில் கடையொன்றின் உதவியாளர் கொடுக்கல்வாங்கல்களை செய்முறைப்படுத்தும் விதத்தில் உங்கள் பார்வைக்கு அப்பால் உங்கள் அட்டையினை எடுத்துச்செல்வார். உங்கள் அட்டையினை ஒன்றிற்கு மேற்பட்ட பொறியினூடாக வருடுமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தன்னியக்கக்கூற்றுப் பொறியிலுள்ள அட்டையினை செருகும் பகுதி பற்றி சந்தேகத்திற்குரிய சில விடயங்கள் பற்றி நீங்கள் கவனிக்கமுடியும் (உ-ம் இணைக்கப்பட்ட சாதனம்) என்பதுடன் வழமைக்குமாறான அல்லது அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள் உங்கள் கணக்கின் மீது அல்லது கடன் அட்டையில் இடம்பெற்றிருப்பதனை நீங்கள் கவனிக்கமுடியும்.

### பணயத்தீ நிரல் மென்பொருள் (Ransomware)

பணயத்தீ நிரல் மென்பொருள் என்பது தீங்கிழைக்கும் மென்பொருட்களில் ஒரு வகையாகும். இதனை ஊடுருவியோர் உங்கள் கணனியின் அல்லது செல்லிடத்தொலைபேசி சாதனத்தில் உங்களின் சம்மதம் இல்லாமல் அல்லது உங்களுக்கு தெரியாமல் பொருத்திவிடுவர். இது உங்கள் கணனியிலுள்ள அல்லது செல்லிடத்தொலைபேசியிலுள்ள கோப்புக்களை குறிமுறையாக்கி தகவல் மறைப்பு செய்துவிடும். அதன் பின்னர் இது மேல் மீட்பு செய்திகளின் மூலமாக பயன்படுத்துனருடன் தொடர்புகளை ஏற்படுத்துவதுடன் கேட்டுக்கொள்ளப்பட்ட கப்பப் பணத்தொகை செலுத்தப்படும் வரை கணனியை அல்லது செல்லிடத்தொலைபேசியை அணுகும் வசதி கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

தரவுகள் மற்றும் நிதியியல் இழப்புக்களினால் பாதிக்கப்படுமொருவராக இருக்க வேண்டாம். வழமையாக பணயத்தீநிரல் மென்பொருள், தீங்கிழைக்கும் இணைப்புக்களுடன் சேர்ந்து மின்னஞ்சல் ஊடாக இணைய வலையமைப்பிலும் கணனிகளிலும் நுழைந்துவிடுகிறது. பயன்படுத்துனர் இணைக்கப்பட்ட கோப்பினைத் திறந்ததும் தீங்கிழைக்கும் மென்பொருள் முறைமையின் மீது அறியாமலேயே இணைக்கப்பட்டுவிடுகிறது. இத்தீங்கிழைக்கும்

மென்பொருள் ஊடுருவியோர் கப்பத்தொகையினைப் பெறும் வரை முறைமையை அணுகும் வசதியை தடைசெய்கிறது.

### தகவல் பாதுகாப்பு என்பது ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்

எனது கணனியில் முக்கியமானவை என்று எதுவுமில்லை, நாங்கள் தொற்றுக்கெதிரான மென்பொருளைக் கொண்டிருப்பதனால் எனது கணனி எந்தவொன்றிலிருந்தும் வெளியிலிருந்து வரும் எந்த அச்சுறுத்தலிருந்தும் பாதுகாக்கப்படுகிறது. பாதுகாப்பு பற்றி கவலைப்படுவது எனது வேலையல்ல, தொழில்நுட்பம் முழுப் பாதுகாப்பினையும் வழங்குவதுடன் பதிவிறக்கம் செய்யப்படும் PDF ஆவணங்கள் பாதுகாப்பானவை. தகவல் பாதுகாப்பு என்பது தகவல் தொழில்நுட்பம் போன்றவற்றின் பொறுப்பாகும் என்பன போன்ற சில தவறான கருதுகோள்கள் காணப்படுகின்றன.

மிகப் பொதுவான தவறுகளாக மோசமான கடவுச்சொல் முகாமைத்துவம், கணனி வலையமைப்புடன் இணைக்கப்பட்டு கவனிக்கப்படாதுள்ளமை, தீங்கிழைக்கும் மின்னஞ்சல் இணைப்புக்கள், தொற்றிற்கெதிரான காத்திரமற்ற மென்பொருள், கட்டுப்பாட்டுகளற்ற மடிக்கணனி, பாதுகாப்பு மீறல்களை அறிவிக்காமை, செல்லிடத்தொலைபேசி மற்றும் செயலிகளின் அமையப் பயன்பாடு, இற்றைப்படுத்தல்கள், இற்றைப்படுத்தல் மென்பொருள் மற்றும் இற்றைப்படுத்தல் சேகரிப்புக்கள் நிறுவப்படாமை, மோசமான சுற்றுப்புறப் பாதுகாப்பு (இலத்திரனியல் மற்றும் பௌதீகம்) என்பன காணப்படுகின்றன.

தூய்மையான மற்றும் பாதுகாப்பான வேலைத்தலத்தில் அச்சிடப்பட்ட உணர்திறன்மிக்க தகவல்களுக்கும் கொண்டு செல்லக்கூடிய ஊடக களஞ்சியப்படுத்தல்களுக்கும் பூட்டி வைக்கும் நிலப் பேழைகளை/ இழுப்பறைகளை பயன்படுத்தவும். மேசையை விட்டு எழுவதற்கு முன்னர் கவனிக்கப்படாத விடயங்களை பூட்டி/ விடுபதிகை செய்து கொள்ளவும். உணர்திறன்மிக்க தகவல்களை பகிர்ந்துகொள்வதற்கும் கலந்துரையாடுவதற்கும் பாதுகாப்பான கலந்துரையாடல் அறைகளை கட்டாயமாக பயன்படுத்தல் வேண்டும். தாள்களை துகள்களாக்கும் பொறிகளையும் எரிக்கும் குப்பைக்கூடைகளையும் பயன்படுத்துவதன் மூலம் ஆவணங்களை சரியான முறையில் அகற்றுதல் வேண்டும். திறந்த வெளிகளில் விவேகத்துடன் நடந்துகொள்ளவும் களவு இடம்பெற்றவுடன் உள்ளூர் அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவிக்கவும். முழுப்பயணத்தின் போதும் உங்கள் சாதனத்தினை பாதுகாத்துக்கொள்ளவும். அடையாள அட்டைகளையும் பெரும்பாலும் சீருடைகளையும் மற்றைய கட்டுப்பாடுகளை அணுகும் வழிமுறைகளையும் பாதுகாத்துக்கொள்ளுதல் வேண்டும். கண்காணிக்கும் கமராக்கள் மற்றும் எச்சரிக்கை மணியுடன் சேர்த்துப் பயிற்சிபெற்ற பாதுகாப்பு ஆளணியினரை தொழிலுக்கு அமர்த்தவும். நிறுவனத்தின் மிக முக்கியமான இடங்கள் அதிகாரமளிக்கப்படாதவர்கள் அணுகுவதனைத் தடைசெய்யும் விதத்தில் கட்டுப்படுத்தப்படல் வேண்டும். வருகை தருவோர் வருகை தருவோர் அறைகளுக்கு அல்லது மண்டபங்களுக்கு பாதுகாப்பு அலுவலர் அல்லது ஆளணியினரின் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்படல் வேண்டும். உணர்திறன் மிக்க தகவல்களைக் கொண்டிருக்கின்ற அலுவலகப் பகுதிக்குள் சுத்திகரிப்பு ஆட்களும் பணியாற்றும் அலுவலர்களும் செல்வதனை மேற்பார்வை செய்வதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இணையத்தளத்திலிருந்து உங்கள் பிள்ளைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கு இணைய மிரட்டல்கள் குறித்து அவர்களுக்கு அறிவூட்டவும். உங்கள் பிள்ளைகளுக்காக பிரத்தியேகமான வீட்டுக் கணனிகளை வைத்திருக்கவும். அவர்களது இணையவழி நடவடிக்கைகளை கண்காணிக்கவும். இணைய வழிப்பயன்பாடு தொடர்பில் அடிப்படை விதிகளை நிறுவவும். இணையவழியூடாக அதிகளவு தனிப்பட்ட தகவல்களை கூடியளவிற்கு பகிர்ந்துகொள்ள வேண்டாம்.

பாதுகாப்பு நிகழ்வுகளையும் சம்பவங்களையும் சேதங்களை மட்டுப்படுத்தும் விதத்திலும், மீட்புச் செலவுகளையும் எதிர்மறையான விளைவுகளையும் குறைக்கும் விதத்திலும், சூழலைப் பாதுகாக்கும் விதத்திலும் விழிப்புணர்வினை அதிகரிக்கும் விதத்திலும் அறிக்கையிடுதல் வேண்டும்.

இறுதியாக, இணையவழி பாதுகாப்பு என்பது நிறுவனத்திலுள்ள ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். தகவல் பாதுகாப்புக் குழு, நிறுவனத்திற்குள்ளே இருந்தான இணையவழி பாதுகாப்பிற்கான கலாச்சாரத்தினை மாத்திரமே நடைமுறைப்படுத்த முடியும். நிறுவனம் பாதுகாக்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவது தொடர்பில் ஒவ்வொரு ஊழியரும் முக்கியமான வகிபாகத்தினைக் கொண்டிருப்பதனால் இது அவர்களுக்கு முக்கியமானதாகும். அலுவலகத்திலும் வீட்டிலும் கணனியை அழுத்துவதற்கு முன் இது பற்றி சிந்தியுங்கள்.



# நிதியியல் துறையில் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் இன்றிமையாத வகிபாகம்


பி ஜீ ஜீ என் ரூபசிங்க
மூத்த உதவிப் பணிப்பாளர்
இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம்


## 1. அறிமுகம்

இணையவழிப் பாதுகாப்பின் தோற்றவமைப்பானது, இணையவழி அச்சுறுத்தல்களுக்குகெதிரான நிதியியல் நிறுவனங்களின் போராட்ட முன்னரங்காகவிருந்து, கடந்த தசாப்த காலத்தில் கணிசமான பரிணாம வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. உணர்திறன்மிக்க நிதியியல் தரவுகளை பாதுகாப்பதற்கும் ஆர்வலர்களின் நம்பிக்கை பொறுப்புக்களை பேணுவதற்கும் நிறுவனங்கள் கடுமையாக முயற்சிப்பதனால் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் வகிபாகம் அதிகளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகமாறியிருக்கின்றது. இக்கட்டுரையானது முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் பன்முகத்தன்மை கொண்ட வகிபாகம், அவர்களின் பொறுப்புக்களையும் உபாயங்களையும் கண்டறிதல் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் ஒட்டுமொத்த பாதுகாப்பு நிலைப்பாட்டின் மீதான அவர்களினது பணியின் தாக்கம் என்பனவற்றை ஆராய்கிறது.

## 2. நிதியியல் நிறுவனங்களின் இணையவழிப் பாதுகாப்பினது முக்கியத்துவம்

நிதியியல் நிறுவனங்கள் வைத்திருக்கின்ற தரவுகளின் உயர்ந்த பெறுமானம் மற்றும் அவர்களது சேவைகளின் இன்றியமையாத தன்மை என்பனவற்றின் காரணமாக அவை இணையவழி தாக்குதல்களின் பிரதான இலக்குகளாக காணப்படுகின்றன. அக்சென்றறினால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றின்படி, நிதியியல் சேவைகள் மற்றைய தொழில்துறைகளைவிட 300 தடவைகள் கூடுதலாக இணையவழித் தாக்குதல்களை எதிர்கொள்கின்றன (அக்சென்ரர் 2021). 2023ஆம் ஆண்டின் நிதியியல் இணையவழி அச்சுறுத்தல் தோற்றவமைப்பு அறிக்கையின்படி, கடந்த ஆண்டில் நிதியியல் நிறுவனங்களை பிரதான இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தந்திரமாக ஏமாற்றுதல் தாக்குதல்கள் 30 சதவீதம் அதிகரித்திருக்கிறது. (இணைய வழிப் பாதுகாப்பிற்கான ஐரோப்பிய ஒன்றிய முகவர், 2022). அத்தகைய தாக்குதல்களின் விளைவுகள், நிதியியல் இழப்புக்கள், கீர்த்திவாய்ந்ததன்மைக்கு ஏற்படும் சேதங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மீறப்பட்டமைக்கான தண்டங்கள் உள்ளிட்ட அழிவுகளை ஏற்படுத்தமுடியும். அதிகரிக்கின்ற நிகழ்வுகளின் எண்ணிக்கை மற்றும் இணையவழி அச்சுறுத்தல்களின் நவீனத்துவத்தன்மைகள் என்பன நிறுவனங்களின் இணையவழிப் பாதுகாப்புக் கட்டமைப்பினை மேற்பார்வை செய்வதற்கும் பலப்படுத்துவதற்குமாக பிரத்தியேகத்தன்மைவாய்ந்த முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரொருவரைக் கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றன.

### 2.1 நிதியியல் நிறுவனங்களின் மீதான இணையவழித் தாக்குதல்களின் தாக்கம்

நிதியியல் நிறுவனங்கள் மீதான இணையவழித் தாக்குதல்களின் விளைவுகள் ஆழமானவைகளாகவும் பன்முகத்தன்மை கொண்டனவாகவும் காணப்படுகின்றன. அத்தகைய சம்பவங்களிலிருந்து தோன்றுகின்ற நிதியியல் இழப்புக்கள் திகைக்கவைப்பனவாகக் காணப்படுகின்றன. 2022இல் நிதியியல் துறையில் தரவு மீறல்களின் காரணமாக ஏற்பட்ட சராசரி செலவு டொலர் 5.85 மில்லியன்களாகக் காணப்படுகின்றது (IBM Security, 2022). நிதியியல் இழப்புக்களுக்கு அப்பால், இணையவழி தாக்குதல்கள் வாடிக்கையாளர் நம்பிக்கையினை கொஞ்சம் கொஞ்சமாக அரித்து, கீர்த்திவாய்ந்த தன்மைக்கு சேதம் ஏற்படுத்தி இறுதியில் ஒழுங்குமுறைப்படுத்தல் தண்டங்களுக்கு வழிவகுத்து விடுகின்றது. 2017இன் ஈகுயிவக்ஸ் (Equifax) தரவு மீறல் வலுவான நினைவூட்டலாகக் காணப்படுகின்றவிடத்து 147 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டமையானது கணிசமான நிதியியல் தண்டங்களை தோற்றுவித்ததுடன் கம்பனியின் கீர்த்தியின் மீது நீண்டகால தாக்கத்தினையும் ஏற்படுத்தியது.

### 2.2 வாடிக்கையாளர் தரவுகளை பாதுகாத்துக்கொள்வதினதும் நம்பிக்கைப் பொறுப்பினைப் பேணிக்கொள்வதினதும் முக்கியத்துவம்

உயர்போட்டித்தன்மை வாய்ந்த வங்கித்தொழில் துறையில் வாடிக்கையாளர் நம்பிக்கைப் பொறுப்பு என்பது மிக முக்கியமானதாகும். உத்வேகம் நிறைந்த இணையவழிப் பாதுகாப்பு வழிமுறைகளைப் பேணுவது வாடிக்கையாளர் தரவுகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் அதன் மூலமாக நம்பிக்கையினையும் விசுவாசத்தினையும் பேணி வளர்ப்பதும் இன்றியமையாததாகும். 2022 டிலொயிற் அளவீட்டினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, நிதியியல் நிறுவனங்கள் தரவு மீறல்களினால் பாதிக்கப்படுமாயின் 78 சதவீதமான வாடிக்கையாளர்கள் அவற்றிலிருந்து விலகிவிடக்கூடும் (டிலொயிற், 2022). ஆகவே, வலுவான இணையவழி பாதுகாப்புக் கட்டமைப்பில் முதலீடுகளை மேற்கொள்வது உணர்திறன்மிக்க தரவுகளைப் பாதுகாப்பது மட்டுமன்றி வாடிக்கையாளர் நம்பிக்கையினையும் நீடித்து நிலைத்திருக்கச்செய்யும்.

## 3. இணையவழி அச்சுறுத்தல்களின் பரிணாம வளர்ச்சி

டிஜிட்டல் வங்கித்தொழிலின் துணிகர முயற்சிகளின் பின்னர் வங்கித்தொழில் துறை இணையவழி அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியிருக்கிறது. ஆரம்பத்தில், இவ்வச்சுறுத்தல்கள் ஒப்பீட்டு ரீதியில் அதிக நவீனத்துவமற்றனவாகவும் முக்கியமாக கைகளினால் மேற்கொள்ளப்படும் மோசடிகள் மற்றும் அடிப்படை ஊடுருவல் நுட்பங்களுடன் தொடர்புபட்டனவாகவும் காணப்பட்டன. எனினும், இணையவழி வங்கித்தொழிலும் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களும் பெருக்கடைந்தமையுடன் இணையவழி அச்சுறுத்தல் கணிசமானளவிற்கு வளர்ந்துவிட்டது. 2000ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் தந்திரமாக ஏமாற்றும் மற்றும் தீங்கிழைக்கும் மென்பொருட்களின் தாக்கம் அதிகரிப்புக்களைக் காட்டிய வேளையில், கடந்த தசாப்தகாலம் முன்னேற்றம் கண்ட விடாப்பிடியான அச்சுறுத்தல்கள் மற்றும் இலக்கிடப்பட்ட பணயத்தீநிரல் (ransomware) தாக்குதல்கள் போன்ற மிகச் சிக்கலான அச்சுறுத்தல்களை எடுத்துக்காட்டின (சைமன்டென் 2022).

### 3.1. வங்கித்தொழில் தொழில்துறையில் கவனிக்கத்தக்க இணையவழிப் பாதுகாப்புச் சம்பவங்களின் பகுப்பாய்வு

யதார்த்த உலகின் இணையவழிப் பாதுகாப்புச் சம்பவங்களை ஆராய்வது நிதியியல் நிறுவனங்களினால் எதிர்நோக்கப்படக்கூடிய சவால்கள் அவற்றின் பாதுகாப்பு வழிமுறைகளின் காத்திரமான தன்மையினையும் தொடர்பிலான நுண்நோக்குகளை வழங்குகின்றன. கவனிக்கத்தக்க சம்பவங்கள் பின்வருவனற்றை உள்ளடக்குகின்றன.

- வங்காளதேச வங்கியில் திருட்டு (2016): வங்காளதேச வங்கியின் தொழில்நுட்பம் மற்றும் நடவடிக்கை முறை கட்டுப்பாடுகளிலுள்ள பலயீனங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில், குற்றவியலாளர்கள் தீங்கிழைக்கும் மென்பொருட்களைப் பயன்படுத்திக் கொண்டனர். இதன்விளைவாக, 81 மில்லியன் டொலர் திருடப்பட்டது. SWIFT(உலகளாவிய வங்கிகளுக்கிடையிலான நிதியியல் தொலைத்தொடர்பூட்டல்) முறைமை பாதிக்கப்படாத ஒன்றாக காணப்பட்ட போதும் தாக்குதலை நடத்தியோர் அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு வங்கியின் வலையமைப்பிலும் பாதுகாப்பு நடைமுறையிலும் காணப்பட்ட பாதிக்கப்படும் தன்மைகளைப் பயன்படுத்திக்கொண்டனர். இச்சம்பவம் வலுவான உள்ளகப் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளுக்கான

தேவையினையும் நிதியியல் நிறுவனங்களுக்குள்ளே கண்காணிப்பு பொறிமுறைகளுக்கான தேவையினையும் எடுத்துக்காட்டிது. (ரொயிட்டர் 2016).

- கெப்பிட்டல் வண் தரவு மீறல் (2019): தவறான கட்டமைப்பினைக் கொண்ட வெப்பிரயோக கணனி அரண் 100 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தகவல்களை தாக்குதலாளர்கள் அணுகுவதற்கு அனுமதித்தது. மீறலானது உத்வேகம் மிக்க அணுகுவசதி கட்டுப்பாடுகள் சரியான பாதுகாப்பு அரண் கட்டமைப்பு, மற்றும் அதிகாரமளிக்கப்படாத அணுகுவசதியைத் தடை செய்வதற்கான கிரமமான கணக்காய்வு என்பனவற்றின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டியது. (கெப்பிட்டல் வண் 2019).

- சோலார்வின்ட்ஸ் வழங்கல் சங்கிலித் தாக்குதல் (2020): உயர் நவீனத்துவம் வாய்ந்த தொழிற்பாடொன்றில் தாக்குதலாளர்கள் பரந்தளவிற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்ற வலையமைப்பு முகாமைத்துவக் கருவியான சோலார்வின்ட்ஸ் ஒரியன் தளத்தினை பாதிக்கச்செய்வதன் மூலம் மென்பொருள் வழங்கல் சங்கிலியை ஊடுருவியதன் மூலம் தீங்கிழைக்கும் குறியீடு மென்பொருள் இற்றைப்படுத்தலுக்குள் பதிக்கப்பட்டது. இது, பின்னர் அரச முகவராண்மைகள், இன்றியமையாத உட்கட்டமைப்புக்களை வழங்குவோர் மற்றும் உலகளாவிய நிதியியல் நிறுவனங்கள் உட்பட ஆயிரக்கணக்கான நிறுவனங்களினால் அவற்றிற்குத் தெரியாமலேயே நிறுவப்பட்டது. இத்தாக்குதல் மாதக்கணக்கில் கண்டறியப்படாமல் இருந்தமை, ஊடுருவியோர் உணர்திறன்மிக்க முறைமையினையும் தரவுகளையும் பெருமளவில் அணுகுவதற்கு வசதியளித்தது. இச்சம்பவம் உத்வேகம் மிக்க வழங்கல் சங்கிலி பாதுகாப்பு, மூன்றாம் தரப்பு மென்பொருள்கள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுதல் மற்றும் எதிர்காலத்தில் இதுபோன்ற அச்சுறுத்தலுக்கெதிரான பாதுகாப்பிற்கான அனைத்தையுமுள்ளடக்கிய இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு என்பனவற்றிற்கான இன்றியமையாததான தேவையினை வலியுறுத்தியது. (CISA, 2021).

## 4. முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் பற்றிய வரைவிலக்கணமும் பொறுப்புக்களும்

முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் என்பது நிறுவனமொன்றின் தகவல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பாகவுள்ள மூத்த நிறைவேற்றுநர் என்பதாகும். இவ்வகிபாகமானது நிறுவனத்தில் தகவல் சொத்துக்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல், பாதுகாப்பு தொழில்நுட்பங்களை முகாமைப்படுத்தல், மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுவதனை உறுதிப்படுத்தல் என்பன உள்ளிட்ட பரந்த வீச்சிலான பொறுப்புக்களை உள்ளடக்கியிருக்கிறது. முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரொருவர் பிந்திய இணையவழி அச்சுறுத்தல்களுக்கு அணித்தாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இவ்விடர்நேர்வுகளைக் காத்திரமான விதத்தில் தணிப்பதற்கு நிறுவனத்தின் பாதுகாப்பு உபாயங்களை தொடர்ச்சியாக கடைப்பிடித்தலும் வேண்டும் (கார்ட்னர் 2022).

## 5. முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் நியமனம்

நிறுவனமொன்றில் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரை நியமனம் செய்வது அதன் இணையவழி பாதுகாப்பு உபாயத்தின் காத்திரமான தன்மையில் நேரடியான தாக்கத்தினைக் கொண்டிருக்கும். நிறுவனத்தின் டிஜிட்டல் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு, முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் செல்வாக்குமிக்க உயர்மட்ட தீர்மானங்களை மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் பாதுகாப்பு வழிமுறைகள் தொழிற்பாடுகளுடன் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்தலும் வேண்டும்.

### 5.1. அறிக்கையிடல் கட்டமைப்பும் நிறுவன ரீதியாக நிலைப்படுத்தலும்

முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் அறிக்கையிடல் கட்டமைப்பு தவிர்க்கமுடியாததொரு விடயமாகும். பாரம்பரிய ரீதியாக முதன்மை தகவல் அலுவலருக்கு அறிக்கையிடுகின்ற அதேவேளையில், பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிப்பதற்கான முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் இயலாற்றலை மட்டுப்படுத்துகிறது. உண்மையில், முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் முதன்மை நிறைவேற்று அலுவலருக்கு அல்லது சபைக்கு நேரடியாக அறிக்கையிட்டு இணையவழிப் பாதுகாப்பினை நிறுவன ரீதியான உபாயத்துடன் அணிப்படுத்துவதற்கும் தேவையான முதலீடுகளைப் பரிந்துரைப்பதற்கும் அவசரகால அச்சுறுத்தல்கள் மீதான இற்றைப்படுத்தல்களை வழங்குவதற்குமான அதிகாரங்களை அவர்களுக்கு வழங்க

வேண்டும். இத்தகைய தெளிவான நிலைமை, இணையவழிப் பாதுகாப்பு உச்ச முன்னுரிமைக்குரியது என்பதனை உறுதிப்படுத்துகின்றது. அத்தகைய அணுகுவழி இல்லாமல், முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் இணையவழி பாதுகாப்பு கரிசனைகளைக் காத்திரமான விதத்தில் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளவதில் சவால்களை எதிர்நோக்கக்கூடும்.

### 5.2. சுயாதீனமும் அதிகாரமும்

குறுங்கால வியாபார இலக்குகள் தொடர்பில் பாதுகாப்பினை முன்னுரிமைப்படுத்துகின்ற தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரொருவர் உயர்மட்ட அதிகாரத்துடனும் சுயாதீனத்துடனும் நியமிக்கப்படுதல் வேண்டும். பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றைய வியாபார முன்னுரிமைகளுடன் முரண்படக்கூடிய வேளையிலும் கூட அவற்றினை நடைமுறைப்படுத்துவதற்கு இச்சுயாதீனம் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரை இயலுமைப்படுத்தும். போதுமான அதிகாரம் இல்லாதவிடத்து, முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர், விசேடமாக பாதுகாப்பிலும் பார்க்க வியாபாரப் பெறுபேறுகளின் மீது திணைக்களங்கள் கூடுதலான கவனத்தினைச் செலுத்துவதிலிருந்து தோன்றும் உள்ளகத் தாக்குப்பிடிக்கும் தன்மையினை எதிர்கொள்ளும் போது கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் அல்லது தேவையான மாற்றங்களை நடைமுறைக்கிடுவதில் சிரமங்களை எதிர்நோக்கக்கூடும். முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் வகிபாகம் நிறுவனத்திற்குள்ளே நிலவும் அக்கறைகளின் முரண்பாடுகளினால் குறைத்து மதிப்பிடப்படக்கூடாது. நெருக்கடிமிக்க நேரத்தில் தீர்க்கமான முறையில் செயற்படுவதற்குத் தேவையான அதிகாரத்தினை முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் பணி, நிறுவன ரீதியான இணையவழிப் பாதுகாப்பின் முதன்மையான மேலாளர் என்ற ரீதியில் அவரின் இன்றியமையாத வகிபாகத்தினை பிரதிபலித்தல் வேண்டும்.

### 5.3. வியாபாரத்துடனும் இடர்நேர்வு முகாமைத்துவத்துடனும் அணிப்படுத்தல்

முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் சுயாதீனத்தினை கட்டாயமாக பேணவேண்டிய அதேவேளையில் மற்றைய வியாபார தொழிற்பாடுகளுடனும் நெருக்கமாக பணியாற்றுவதும் மிக முக்கியமானதாகும். முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்களின் நிலைப்பாடும் தகவல் தொழில்நுட்பம், சட்டம், இடர்நேர்வு முகாமைத்துவம் போன்ற திணைக்களங்களுடன் காத்திரமான விதத்தில் ஒத்துழைப்பதற்கும் நிறுவனத்தினது தொழிற்பாடுகளின் ஒவ்வொரு முகப்புக்கூறுகளுக்குள்ளும் இணையவழி பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான இணங்குவிப்பினையும் மேற்கொள்ள அவர்களை அனுமதித்தல் வேண்டும். உதாரணமாக, உபாய வியாபார தீர்மானங்களில் ஈடுபட்டிருக்கின்ற முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரொருவர் இச்சம்பவங்கள் நிகழ்ந்ததன் பின்னர் அவற்றிற்கெதிராக செயற்படுத்துவதிலும் பார்க்க, இணையவழிப் பாதுகாப்பு இடர்நேர்வுகள் பாரிய அச்சுறுத்தல்களாக மாறுவதற்கு முன்னதாக, இணையவழிப் பாதுகாப்பு இடர்நேர்வினைத் தணிப்பதற்கு உதவமுடியும்.

நிறுவனங்களில் இணையவழிப் பாதுகாப்பு பரந்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பிற்குள் ஒருங்கிணைக்கப்பட்டிருக்குமிடத்து முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர், கம்பனி அதன் குறிக்கோள்களை பூர்த்திசெய்வதற்கான இயலாற்றலைப் பாதிக்கின்ற தொழிற்பாடு மற்றும் உபாய இடர்நேர்வுகள் இரண்டினையும் அடையாளம் காணவும் கட்டுப்படுத்தவும் உதவும். இது, இணையவழிப் பாதுகாப்பு முயற்சிகள் நிறுவனத்தின் மைய இலக்குகளிலிருந்து வேறாக்கப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்துகின்றதெனினும் வியாபாரத்தின் நீண்டகால வெற்றிக்கும் அதன் தாக்குப்பிடிக்கும் தன்மைக்கும் பெரும் ஆதரவாக அமைகிறது.

### 5.4. இணையவழி பாதுகாப்புக் கலாச்சாத்தின் மீதான தாக்கம்

முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் இடம்பெறுகின்றமை நிறுவனத்தின் இணையவழிப் பாதுகாப்பு கலாச்சாரத்தின் மீது தாக்கத்தினைக் கொண்டிருக்கிறது. சபையினையும் மூத்த முகாமைத்துவத்தினரையும் நேரடியாக அணுகக்கூடிய வசதியை முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் கொண்டிருப்பது நிறுவனத்தின் அனைத்து மட்டங்களிலும் பாதுகாப்பே முதலில் என்ற மனோபாவத்தினை ஊக்குவிப்பதாக அமையும். ஊழியர்கள் கூடியளவிற்கு விழிப்புணர்வுமிக்கவர்களாகவும் பாதுகாப்பு நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கக்கூடியவர்களாகவுமிருப்பர் என்பதனால் உத்வேகம் மிக்க இணையவழிப் பாதுகாப்புக்

கலாச்சாரச் சம்பவங்கள் நிகழ்வதற்கு முன்பே அவற்றை தடைசெய்ய உதவுவதனால் இக்கலாச்சார மாற்றம் மிக முக்கியமானதொன்றாகக் காணப்படுகிறது.

மாறாக, முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் நிறுவனத்தின் குறைந்த மட்டங்களுக்குள் அடக்கப்பட்டிருப்பாராயின் அல்லது திணைக்களங்கள் உபாயத் தீர்மானங்களுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்காவிடின் இணையவழிப் பாதுகாப்பின் மீதான கவனம் குறைவடைந்து, இதன் காத்திரமான தன்மையும் குறைவடைந்து போகலாம். ஆகவே முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் நிலைப்பாடு, நிறுவனத்தின் பரந்த தொழிற்பாடுகளிலும் உபாய முன்னுரிமைகளிலும் இணையவழிப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தினை பிரதிபலிப்பது இன்றியமையாததாகும்.

## 6. முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் பரிணாமடைந்து வருகின்ற வகிபாகம்

முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் வகிபாகம், தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பின் மீது முக்கியமாகக் காட்டப்படுகின்ற கவனத்திலிருந்து இடர்நேர்வு முகாமைத்துவம், ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவிப்புக்கள் மற்றும் உபாயத்திட்டம் என்பனவற்றை உள்ளடக்கிய பரந்த வீச்சு வரையிலான பொறுப்புக்களை உள்ளடக்கி பரிணாமவளர்ச்சியடைகிறது. வளர்ந்துவரும் அங்கீகாரமானது இணையவழிப் பாதுகாப்பானது வெறுமனே தகவல் தொழில்நுட்ப பிரச்சனையல்ல என்பதனையும் ஒட்டுமொத்த வியாபார உபாயத்தின் இன்றியமையாத கூறு என்பதனையும் இப்பரிணாம வளர்ச்சி பிரதிபலிக்கிறது.

### 6.1. நிறுவனமொன்றில் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் உபாயம் மிக்க வகிபாகம்

முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் முக்கியமான பொறுப்புயாதெனில், நிறுவனத்தின் ஒட்டுமொத்த வியாபார குறிக்கோள்களுடன் இணைந்துள்ள அனைத்தையுமுள்ளடக்கிய இணையவழிப் பாதுகாப்பு உபாயத்தினை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதேயாகும். இது, சாத்தியமான அச்சுறுத்தல்களை அடையாளம் காண்பது, பாதிக்கப்படக்கூடிய தன்மைகளை மதிப்பீடு செய்வது மற்றும் உத்வேகம் மிக்க பாதுகாப்பு பொறிமுறைகளை நடைமுறைக்கிடுவது என்பனவற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர், நிறுவனத்தின் பாதுகாப்புக்கள் தோற்றம்பெற்றுவருகின்ற அச்சுறுத்தல்களுக்கு எதிராக காத்திரமான தன்மையுடன் தொடர்ந்து காணப்படுவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் இணையவழிப் பாதுகாப்பின் அண்மைய போக்குகளுக்கும் அபிவிருத்திகளுக்கும் நிகரான விதத்தில் இருத்தல் வேண்டும். முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர், நிறுவனத்தின் உபாயத் திட்டமிடல் செய்முறைகளுடன் இணையவழிப் பாதுகாப்பினை ஒருங்கிணைக்கும் விதத்தில் ஏனைய மூத்த தலைவர்களுடன் நெருக்கமாக பணியாற்றுதல் வேண்டும் என்பதுடன், பாதுகாப்பு பரிசீலனைகள் வியாபாரத்தின் ஒவ்வொரு அம்சங்களிலும் புகுத்தப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்தலும் வேண்டும்.

பன்னாட்டு நாணய நிதியத்தின் படி, காத்திரமான இணையவழி இடர்நேர்வு முகாமைத்துவம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு மிக இன்றியமையாததாகும். (ப.நா.நிதியம், 2023).

### 6.2. அனைத்தையுமுள்ளடக்கிய இணையவழிப் பாதுகாப்புத் திட்டத்தினை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்

முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் பிரதான பொறுப்புக்களிலொன்று பரந்தளவிலான இணையவழிப் பாதுகாப்பு திட்டமொன்றினை உருவாக்கி அதனை நடைமுறைப்படுத்துவதாகும். இத்திட்டமானது அச்சுறுத்தலைக் கண்டறிவதிலிருந்து நிகழ்வுகளின் பதிலிறுப்பு மற்றும் மீட்புத்தடை வரையிலான நிறுவனத்தின் இணையவழிப் பாதுகாப்பு நிலைப்பாட்டின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். உத்வேகம் மிக்க இணையவழிப் பாதுகாப்புத் திட்டத்தின் முக்கியமான கூறுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

- சாத்தியமான பாதிக்கப்படும் தன்மைகளை அடையாளம் காண்பதற்கும் தணிப்பதற்குமான இடர்நேர்வுகளை கிரமமாக மதிப்பிடல்.
- ஊடுருவலைக் கண்டறியும் முறைமைகள், பாதுகாப்பு அரண் மற்றும் குறிமுறையாக்கம் போன்ற முன்னேற்றம் கண்ட பாதுகாப்பு தொழில்நுட்பங்களை நடைமுறைக்கிடல்.
- பாதுகாப்பு - உணர்வுதிறன் மிக்க கலாச்சத்தினை பேணிவளர்ப்பதற்கு ஊழியர்களுக்கு பயிற்சியையும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் வழங்குதல்.

- பாதுகாப்பு வழிமுறைகளின் காத்திரமான தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக அவற்றினைத் தொடர்ச்சியாகக் கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல்.
- இணையவழிப் பாதுகாப்பு நியமங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவிப்புக்களைப் பேணுவதற்கான கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- பாதுகாப்பு சம்பவங்களை விரைவாகக் கண்டறிதல் கட்டுப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு சம்பங்களிலிருந்து மீண்டு கொள்ளுதல்.
- அந்தரங்கச் சட்டங்களுடன் இசைந்து செல்லும்விதத்தில் உணர்திறன் தரவுகளைப் பாதுகாப்பதற்கான தரவுப் பாதுகாப்பு மற்றும் அந்தரங்க முகாமைத்துவம்.
- விற்பனையாளர் உறவு முறைகளைப் பாதுகாப்பதற்கும் வெளிப்புற இடர்நேர்வுகளைத் தணிப்பதற்குமான மூன்றாம் தரப்பு மற்றும் வழங்கல் சங்கிலி இடர்நேர்வு முகாமைத்துவம்.
- சம்பவத்திற்குப் பின்னரான துரித தொழிற்பாட்டு ரீதியான மீட்பினை உறுதிப்படுத்துவதற்கான அனர்த்தமீட்பு மற்றும் தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல்.
- உருவாகக்கூடிய அச்சுறுத்தல்களை முன்கூட்டியே கட்டுப்படுத்துவதற்கான அச்சுறுத்தலை உளவறிதல் மற்றும் பகுப்பாய்வு
- ஒழுங்குமுறைப்படுத்தல், சட்டம் மற்றும் ஒப்பந்த ரீதியான தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கான இணங்குவிப்பு மற்றும் கணக்காய்வு முகாமைத்துவம்.

### 6.3. ஏனைய திணைக்களங்களுடனான ஒத்துழைப்பு (தகவல் தொழில்நுட்பம், சட்டம், இடர்நேர்வு முகாமைத்துவம், இணங்குவிப்பு போன்றவை) மற்றும் தொடர்பூட்டல்

ஒத்துழைப்பு என்பது முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் வகிபாகத்தில் மற்றொரு இன்றியமையாதகூறாகும். இணையவழிப் பாதுகாப்பு தனிமைப்படுத்தப்பட்ட ஒரு தொழிற்பாடல்ல. அதற்கு தகவல் தொழில்நுட்பம், சட்டம், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவிப்பு உட்பட, பல்வேறு திணைக்களங்களினதும் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் இணையவழி பாதுகாப்பு தொடர்பில் ஒத்திசைவான மற்றும் பரந்தளவிலான அணுகுமுறையினை உறுதிப்படுத்துவதற்காக இத்திணைக்களங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுதல் வேண்டும். நிதியியல் உறுதிப்பாட்டுச் சபை, இணைத் தொழில்துறை சார்நதவர்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் சபைகள் உட்பட வெளியிலுள்ள ஆர்வலர்களுடன் உளவறிதல் மற்றும் சிறந்த நடைமுறைகளை பகிர்ந்துகொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு, முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலருக்கு விதந்துரைத்தது (நி.உ.சபை, 2023). அனைத்து ஆர்வலர்களும் நிறுவனத்தின் இணையப் பாதுகாப்பு நிலைப்பாடு மற்றும் சாத்தியமான இடர்நேர்வுகள் பற்றி அறிந்திருக்கின்றனர் என்பதனை உறுதிப்படுத்துவதற்கு காத்திரமான தொடர்பூட்டல் இன்றியமையாததாகும். ஏதேனும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகளை சரியான முறையில் அணிப்படுத்தி, கட்டுப்படுத்திப் பேணிக்கொள்வதற்கு திணைக்களங்களிடையே கிரமமான கூட்டங்களும் தொடர்பூட்டல் மார்க்கங்களும் இன்றியமையாதனவாகும். (SANS நிறுவகம், 2022).

### 6.4. இடர்நேர்வு மதிப்பீடும் முகாமைத்துவமும்

இடர்நேர்வு மதிப்பீடும் முகாமைத்துவமும் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் பொறுப்புக்களில் மையக் கூறுகளாகவிளங்குகின்றன. இது, சாத்தியமான இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், நிறுவனத்தின் மீது அவற்றின் தாக்கத்தினை மதிப்பிடல் மற்றும் இவ்விடர்நேர்வுகளை தணிப்பதற்குப் பொருத்தமான கடப்பாடுகளை நடைமுறைப்படுத்தல் என்பனவற்றுடன் தொடர்புபடுகிறது. உத்வேகம் மிக்க முகாமைத்துவக் கட்டமைப்பொன்று பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:

- பலயீனமான தன்மைகளை அடையாளம் காண்பதற்காக பாதிக்கப்படும் தன்மையினையும் ஊடுருவக்கூடியவற்றின் பரீட்சிப்புக்களையும் கிரமமாக மதிப்பிடுதல்.
- சாத்தியமான தாக்கங்களையும் ஏற்படக்கூடிய வேறுபட்ட அச்சுறுத்தல்களையும் மதிப்பீடு செய்வதற்கான இடர்நேர்வு மதிப்பீட்டு முறையியல்கள்.
- வலையமைப்பினை வேவேறாக்குதல், அணுகுவதனைக் கட்டுப்படுத்தல் தரவு குறிமுறையாக்கல் போன்ற இடர்நேர்வுத் தணிப்பு உபாயங்களை நடைமுறைப்படுத்தல்.
- நிறுவனத்தின் இடர்நேர்வுகளை தாங்கிக்கொள்ளும் தன்மை, மற்றும் பதிலிறுக்கும் உபாயங்கள் என்பனவற்றை எடுத்துரைக்கின்ற இடர்நேர்வு முகாமைத்துவத்தினை உருவாக்குதல்.

காத்திரமான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளினால் இணையச் சம்பவங்களின் தாக்கத்தினை கணிசமானளவிற்கு தணிக்கமுடியும் என்பதனை இணையவழிப் பாதுகாப்பிற்கான ஐரோப்பிய ஒன்றிய முகவராண்மை வலியுறுத்துகிறது (ENISA, 2022).

### 6.5. எதிர்பாராத சம்பவங்களுக்கு பதிலிறுத்தும் திட்டமொன்றினை நிறுவுதல்

எதிர்பாராத சம்பவங்களுக்கு பதிலிறுத்தும் காத்திரமான திட்டமொன்று இணையவழிப் பாதுகாப்பின் எதிர்பாராத சம்பங்களின் தாக்கத்தினைக் குறைப்பதற்கு இன்றியமையாததாகும். முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் இத்திட்டத்தினை உருவாக்கிப் பேணுவதற்கு பொறுப்பாக இருப்பார். கண்டுபிடித்தல், அதற்கு பதிலிறுத்தல் மற்றும் பாதுகாப்பு சம்பவங்களிலிருந்து மீண்டுகொள்ளுதல் என்பனவற்றிற்கான விபரமான நடவடிக்கை முறைகளை இது உள்ளடக்கியிருத்தல் வேண்டும். எதிர்பாராத சம்பவங்களுக்கு பதிலிறுத்தும் திட்டத்தின் முக்கிய கூறுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

- அச்சுறுத்தல்களை விரைவாக அடையாளம் காண்பதற்கும் அதன் தனிமையினை மதிப்பிடுவதற்கும் சம்பவங்ளைக் கண்டறியும் மற்றும் பகுப்பாய்வு செய்யும் நடவடிக்கை முறைகள்.
- இணைக்கப்பட்டதும் வினைத்திறன் மிக்கதுமான பதிலிறுப்பினை உறுதிப்படுத்துவதற்கு சம்பவங்களுக்கு பதிலிறுத்தும் குழுவின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள்.
- உள்ளக மற்றும் வெளிப்புற ஆர்வலர்களுக்காக தொடர்பூட்டல் நெறிமுறைகள்.
- கற்றுக்கொண்ட பாடங்களை அடையாளம் காணவும் எதிர்கால பதிலிறுப்பு முயற்சிகளை மேம்படுத்துவதற்குமாக சம்பவம் நிகழ்ந்ததற்குப் பின்னரான பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடல் (ENISA, 2022).

### 6.6. எதிர்பாராத இணையவழிப் பாதுகாப்பு சம்பவங்களுக்கு பதிலிறுக்கும் நடவடிக்கைகள்

இணையப் பாதுகாப்பு சம்பவங்கள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில், முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் பதிலிறுப்பினை முகாமைப்படுத்துவதில் தலைமைத்துவ வகிபாகத்தினை எடுத்துக்கொள்கிறார். இது, அச்சுறுத்தல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் தணிப்பதற்கும் எதிர்பாரா சம்பவங்களுக்கு பதிலிறுத்தும் குழுவுடன் இணைப்புக்களை மேற்கொள்ளுதல், நிறைவேற்று தலைமைத்துவத்துடன் தொடர்பூட்டலை மேற்கொள்ளுதல், மற்றும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையினை உறுதிப்படுத்தல் என்பனவற்றுடன் தொடர்புபடுகிறது. முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர், சம்பவத்தின் மூல காரணத்தினைத் தீர்மானிப்பதற்கும் எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்களைத் தடுப்பதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் ஏற்றவிதத்தில் புலனாய்வு செய்முறைகளை மேற்பார்வை செய்தல் வேண்டும் (Verizon, 2023).

### 6.7. மீட்பு நடவடிக்கைகள் மற்றும் சம்பவத்திற்குப் பின்னரான பகுப்பாய்வு

இணையப் பாதுகாப்பு சம்பவங்களிலிருந்தான மீட்பு, பாதிக்கப்பட்ட முறைமைகளையும் தரவுகளையும் பழைய நிலைப்பாட்டிற்கு கொண்டுவருதல், அதேபோன்று கண்டறியப்பட்ட ஏதேனும் பாதிக்கப்படும் தன்மைகளைக் கட்டுப்படுத்தல் என்பனவற்றுடன் தொடர்புபடுகிறது. முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் மீட்புச் செய்முறைகளை மேற்பார்வை செய்வதிலும் வழமையான தொழிற்பாடுகள் சாத்தியமானளவிற்கு விரைவாகவும் நிச்சயமாகவும் மீண்டும் தொடக்கப்பட்டமையினை உறுதிப்படுத்துவதிலும் இன்றியமையாத வகிபாகத்தினை ஆற்றுகின்றார். மேலும், சம்பவங்களுக்குப் பின்னரான பகுப்பாய்வு, நிறுவனத்தின் பாதுகாப்பு நிலைப்பாட்டில் உள்ள ஏதேனும் இடைவெளிகளை அடையாளம் காண்பதற்கும் எதிர்கால சம்பவங்களைத் தடுக்கும் விதத்தில் மேம்பாடுகளை நடைமுறைக்கிடுவதற்கும் இன்றியமையாததாகும். இச்செய்முறையானது சம்பவத்தின் பதிலிறுப்பினையும் மீட்பு முயற்சிகளையும் முழுமையாக மீளாய்வு செய்தல் அதேபோன்று கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் விதந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துரைக்கின்ற விபரமான அறிக்கையினையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

### 6.8. ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவிப்பு

வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பணிகள் தொழில் துறையானது நிதியியல் முறைமையின் பாதுகாப்பு, அந்தரங்கத்தன்மை மற்றும் நேர்மைத்தன்மை என்பனவற்றை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மற்றும் இணங்குவிப்பு நியமங்களின் பல்வேறு சிக்கலான தன்மைகளைக் கொண்ட தோற்றப்பாட்டிற்குள் தொழிற்படுகிறது. இக்கட்டமைப்புக்கள் கட்டாய தேவைப்பாடுகளை நிறுவுவது மட்டுமன்றி இணையவழி அச்சுறுத்தல்களுக்கெதிரான நிறுவன ரீதியான

தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்தும் சிறந்த நடைமுறைகளை தன்னிச்சையாக கடைப்பிடிப்பதனையும் ஊக்குவிக்கிறது. முக்கியமான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் இணங்குவிப்புக் கூறுகள் பின்வருவனற்றை உள்ளடக்குகின்றதெனினும் அவற்றிற்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருக்கவில்லை.

- தரப்படுத்தலுக்கான பன்னாட்டு அமைப்பு நியமங்கள் (ISO/IEC 27001, ISO/IEC 27701, ISO/IEC 31000), இது நிறுவன ரீதியாக தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் தரவுப் பாதுகாப்பு என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்காக தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம், அந்தரங்கத் தகவல் முகாமைத்துவம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் என்பனவற்றிற்கான அனைத்தையுமுள்ளடக்கிய கட்டமைப்பினை வழங்குகிறது (ISO, 2022).
- தொழிற்பாட்டு இடர்நேர்வின் ஆற்றல்வாய்ந்த முகாமைத்துவத்திற்கான வங்கித்தொழில் மேற்பார்வைக் கோட்பாடுகளின் மீதான பாசல் குழு, இணையவழிப் பாதுகாப்பிற்கான குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டல்களை உள்ளடக்குகிறது. (வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழு 2021).
- த கிராம் - லீச் - பிலிலி சட்டம் (The Gramm-Leach-Bliley Act), இது ஐக்கிய அமெரிக்காவிலுள்ள நிதியியல் நிறுவனங்கள் வாடிக்கையாளர் தகவல்களின் இரகசியத்தன்மையினையும் நேர்மைத்தன்மையினையும் பாதுகாக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறது. (பெடரல் வர்த்தக ஆணைக்குழு 2022).
- தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம், இது, அந்தரங்க தன்மையினைப் பாதுகாப்பதற்கும் தரவுப் பாதுகாப்பு நியமங்களுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்குமாக தனிப்பட்ட தரவுகளை செய்முறைப்படுத்தல், தரவு விடயங்களின் உரிமைகளை வலுப்படுத்தல் மற்றும் தரவுப் பாதுகாப்பு சபையினை நிறுவுதல் என்பனவற்றை ஒழுங்குமுறைப்படுத்துகிறது. (இலங்கை தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை-2022).
- கொடுப்பனவு அட்டைத் தொழிற்துறை தரவுப் பாதுகாப்பு நியமம் (PCI DSS), இது கொடுப்பனவு அட்டைத் தரவுகளைப் பாதுகாப்பதற்கான முற்தேவைப்பாடுகளைக் குறிப்பிடுகிறது. (கொடுப்பனவு அட்டைத் தொழில்துறை பாதுகாப்பு நியமங்கள் சபை 2022).
- பொதுவான தரவுப் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள், இது, ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் தொழிற்படுகின்ற அமைப்புக்களுக்கான கடுமையான தரவுப் பாதுகாப்பினையும் அந்தரங்க வழிமுறைகளையும் கட்டாயப்படுத்துகிறது. (ஐரோப்பிய ஒன்றியம் 2022).
- சுவிப்ற் (SWIFT) வாடிக்கையாளர் நிகழ்ச்சித்திட்டம் சுவிப்ற் உலகளாவிய கொடுப்பனவு செய்தியனுப்பும் வலையமைப்பினைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு குறித்துரைக்கப்பட்ட இணையவழி பாதுகாப்பு கட்டுப்பாடுகளை கட்டாயமாக்கியிருக்கிறது. மோசடியான கொடுக்கல்வாங்கல்களிலிருந்து பாதுகாப்பதற்கு உலகளாவிய நிதியியல் சூழல் முறைமையின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் இணங்குவிப்பு இன்றியமையாததாகிறது (சுவிப்ற் வாடிக்கையாளர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம், 2024).
- மேலும், நியமங்கள் மற்றும் தொழில்நுட்பவியல் தேசிய நிறுவகம் (NIST), இணையவழி பாதுகாப்பு இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்கும் குறைப்பதற்குமாக நிறுவனங்களுக்கு அனைத்தையுமுள்ளடக்கிய இணையவழி பாதுகாப்புக் கட்டமைப்பினை வழங்குகிறது (நி.தொ.தே.நிறுவகம், 2022). இணையத்தள பாதுகாப்பிற்கான நிலையம் (CIS) தகவல் தொழில்நுட்ப முறைமைகளைப் பாதுகாப்பதற்காகவும் உணர்திறன் தரவுகளைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவும் சிறந்த நடைமுறைகள் மற்றும் பாதுகாப்பு கட்டுப்பாடுகளின் தொகுதியொன்றினை வழங்கியிருப்பதுடன் (இணையத்தள பாதுகாப்பிற்கான நிலையம் 2022) திறந்த வெப்தள விநியோகப் பாதுகாப்புச் செயற்றிட்டம் (OWASP) பாதிக்கப்படும் தன்மைகளை அடையாளம் காணுதல் மற்றும் தணித்தல் மூலம் வெப்தளம் மற்றும் செல்லிடத்தொலைபேசி பிரயோகங்களைப் பாதுகாப்பதற்கான வழிகாட்டல்களையும் வழங்குகிறது. (திறந்த வெப்தள பிரயோகப் பாதுகாப்பு செயற்றிட்டம் 2022).

முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் அனைத்து தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடனும் நிறுவனங்கள் இணங்கியொழுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். இணங்கிக்கொள்ளாமையானது கணிசமான தண்டங்களை ஏற்படுத்துவதுடன் சட்ட விளைவுகளையும் ஏற்படுத்தலாம். முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் பிந்திய ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்கள் பற்றி அறிவித்திருத்தல் வேண்டும் என்பதுடன் இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்தும் விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தும்

சபைகளுடன் நெருக்கமாக பணியாற்றுதலும் வேண்டும் (நி.உ.சபை 2023).

### 6.9. பாதுகாப்பை உணர்வுக் கலாச்சாரத்தினைக் கட்டியெழுப்புதல்

பாதுகாப்பு மீறலுக்கான முதற் காரணங்களிலொன்றாக மனித வழுக்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றன. இணையவழிப் பாதுகாப்பு தொழில்முயற்சி மதிப்பீடுகளினால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று அனைத்து இணையவழி பாதுகாப்பு மீறல்களில் 95 சதவீதத்திற்கு மனித வழுக்கள் வகை கூறுகின்றன எனத் தெரிவிக்கிறது. (இணையவழி பாதுகாப்பு தொழில்முயற்சிகள் 2024). முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் நிறுவனங்களுக்குள்ளே இணையவழிப் பாதுகாப்பு கலாச்சாரத்தினை பேணி வளர்ப்பத்தில் இன்றியமையாத வகிபாகத்தினை ஆற்றுகின்ற இணையப் பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றியும் நிறுவனத்தின் சொத்துக்களை பாதுகாப்பதில் அவர்கள் ஆற்றவேண்டிய வகிபாகத்தினையும் அலுவலர்களுக்கு அறிவூட்டுவதற்கு ஊழியர் பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதனை இது உள்ளடக்குகிறது. பாதுகாப்பு - உணர்வுக் கலாச்சாரத்தினை ஊக்குவிப்பதன் மூலம் மனித வழுக்களால் ஏற்படும் இடர்நேர்வு மீறல்களை முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரினால் குறைக்கமுடியும்.

## 7. முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்களினால் எதிர்நோக்கப்படும் சவால்கள்

அவர்களது வகிபாகம் இன்றியமையாத முக்கியத்துவத்தினைக் கொண்டிருக்கின்ற போதும், முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் அவர்களது பொறுப்புக்களை காத்திரமான விதத்தில் நிறைவேற்றுகையில் அநேகமான சவால்களை எதிர்நோக்குகின்றனர். முக்கியமான சவால்களில் சில பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

### 7.1 அச்சுறுத்தல் தோற்றப்பாடுகள் விரைவாக பரிணாமமடைந்துவருகின்றமை

புதிய அச்சுறுத்தல்கள் கிரமமாக தோற்றம்பெற்றுவருவதன் காரணமாக இணையப் பாதுகாப்பின் அச்சுறுத்தல் தோற்றப்பாடு தொடர்ச்சியாக பரிணாமமடைந்து வருகின்றது. இது, முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் இப்புதிய அச்சுறுத்தல்களை கட்டுப்படுத்தும் விதத்தில் அவர்களது அறிவினை தொடர்ச்சியாக இற்றைப்படுத்த வேண்டுமென்பதுடன் அவர்கள் உபாயங்களையும் கடைப்பிடித்தல் வேண்டும். இணைய குற்றவாளிகள் பற்றி முன்கூட்டியே கவனமாக இருப்பது முக்கியமான சவாலாக இருப்பதுடன் இது நிலையான விழிப்புணர்வினையும் புத்தாக்கங்களையும் தேவைப்படுத்துகிறது.

### 7.2 மூலவளத் தடைகள்

அநேக நிதியியல் நிறுவனங்கள் மூலவளத் தடைகளை எதிர்நோக்குகின்றன. இது பரந்தளவிலான இணையப் பாதுகாப்பு வழிமுறைகளை நடைமுறைக்கிடும் அவர்களின் இயலாற்றலை மட்டுப்படுத்துகிறது. இது, வரவுசெலவுத் திட்ட வரையறைகள், அலுவலர் பற்றாக்குறை, மற்றும் முன்னேற்றம் கண்ட பாதுகாப்பு தொழில்நுட்பங்களை அணுகுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வசதிகள் இருக்கின்றமை என்பனவற்றை உள்ளடக்குகிறது. முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் காத்திரமான பாதுகாப்பு உபாயங்களை உருவாக்குவதற்கு இத்தடைகளுடன் பணியாற்றக்கூடிய வழிகளை கண்டறிவது அவசியமாகும்.

### 7.3 பாதுகாப்பினையும் வியாபாரக் குறிகோள்களையும் சமநிலைப்படுத்தல்

உத்வேகம் மிக்க பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் நிறுவனத்தின் வியாபாரக் குறிக்கோள்களுக்கு ஆதரவளிப்பதற்குமிடையில் பிரத்தியேகமான சமநிலையொன்றினைப் பேணுவது கட்டாயமானதாகும். பாதுகாப்பு வழிமுறைகளை சுருக்குவது வியாபார தொழிற்பாடுகளுக்கும் புத்தாக்கங்களுக்கும் முட்டுக்கட்டையாக அமைகின்ற அதேவேளையில் போதுமானதற்ற பாதுகாப்பு நிறுவனத்தினை குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளுக்கும் உள்ளாகிவிடும். சரியான சமநிலையொன்றினைக் கண்டறிவது முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்களுக்கு மிக முக்கியமான சவாலாகக் காணப்படுகிறது.

### 7.4 ஒழுங்குமுறைப்படுத்தலின் சிக்கலான தன்மை

சிக்கல்வாய்ந்த ஒழுங்குமுறைப்படுத்தல் தோற்றப்பாட்டினை வழிநடத்திச் செல்வது முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்களுக்கு சவால்மிக்கதொன்றாக இருக்கும். வேறுபட்ட நியாயாதிக்கங்கள் வேறுபட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை கொண்டிருக்குமென்பதனால் ஏற்புடைத்தான அனைத்து ஒழுங்குவிதிகளுடனும் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவது அச்சமூட்டும்

பணியாக இருக்கும். முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் பிந்திய ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்களைப் பற்றி அறிந்திருப்பது அவசியம் என்பதுடன் அவர்களது நிறுவனங்கள் அனைத்து தொடர்பான தேவைப்பாடுகளுடனும் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தலும் வேண்டும்.

### 8. காத்திரமான இணையப் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கான உபாயங்கள்

இச்சவால்களை கட்டுப்படுத்துவதற்கும் இணையப் பாதுகாப்பினை காத்திரமான விதத்தில் முகாமைப்படுத்துவதற்கும் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் பல்வேறு முக்கிய உபாயங்களை கடைப்பிடிக்க வேண்டும்.

### 8.1 தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல் நுண்ணறிவு

தொடர்ச்சியான கண்காணிப்பும் அச்சுறுத்தல் பற்றிய நுண்ணறிவும் தோற்றம்பெற்றுவரும் அச்சுறுத்தல்களை முன்கூட்டியே அறிந்துகொள்ள மிக இன்றியமையாததாகும். முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் அதேநேரத்தில் அச்சுறுத்தல்களைக் கண்டறிவதற்கும் அவற்றிற்குப் பதிலிறுத்துவதற்கும் முன்னேற்றம் வாய்ந்த கண்காணிப்புக் கருவிகளை நடைமுறைக்கிடல் வேண்டும். மேலும், பல்வேறு மூலங்களிலிருந்துவரும் அச்சுறுத்தல் நுண்ணறிவினைப் பயன்படுத்திக் கொள்வது சாத்தியமான அச்சுறுத்தல்கள் பற்றி அறிந்துகொள்ள பெறுமானம் மிக்க சிந்தனையை வழங்கும் என்பதுடன் நிறுவனம் அவற்றைத் தணிப்பதற்கு வழிமுறைகளை முன்கூட்டியே எடுப்பதற்கும் உதவும்.

### 8.2 இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையினை கடைப்பிடித்தல்

இணையப் பாதுகாப்பிற்கான இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை, நிறுவனத்திற்கான மிக நெருக்கடியான இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதிலும் முன்னுரிமைப்படுத்துவதிலும் கவனம் செலுத்துகின்றது. இது, பாதிக்கப்படும் தன்மையினை அடையாளம் காண்பதற்கு கிரமமான இடர்நேர்வு மதிப்பீடுகளை மேற்கொள்வதுடன் அவற்றின் சாத்தியமான தாக்கங்களை மதிப்பிடுவதுடனும் தொடர்புபடுகிறது. மிகமுக்கியமான இடர்நேர்வுகளை முன்னுரிமைப்படுத்துவதன் மூலம் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் மூலவளங்களை கூடியளவிற்கு காத்திரமான விதத்தில் ஒதுக்கீடு செய்யவும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இலக்கிடப்பட்ட உபாயங்களை உருவாக்க முடியும்.

### 8.3 அடுக்கடுக்கான பாதுகாப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல்

அடுக்கடுக்கான பாதுகாப்பு அணுகுமுறையானது நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்புக் கட்டுப்பாடுகளின் பல்வேறுபட்ட அடுக்குகளை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்புபடுகிறது. இது பாதுகாப்பு அரண் ஊடுருவல்களை கண்டுபிடித்தல் முறைமை மற்றும் குறிமுறையாக்கல் போன்ற தொழில்நுட்ப கட்டுப்பாடுகளையும் அதேபோன்று கொள்கைகள், நடவடிக்கைமுறைகள் மற்றும் ஊழியர் பயிற்சி போன்ற நிருவாக கட்டுப்பாடுகளையும் உள்ளடக்குகிறது. பல்லடுக்கு பாதுகாப்பு உபாயத்தினை நடைமுறைக்கிடுவதன் மூலம் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் நிறுவனத்தின் ஒட்டுமொத்தப் பாதுகாப்பு நிலைப்பாட்டையும் அதிகரிக்கமுடியும்.

### 8.4 தொழில்துறை ஒத்துழைப்பில் ஈடுபடுதல்

ஒரே துறையைச் சேர்ந்த சக தொழில்துறைகளுடனும் ஒழுங்குமுறைப்படுத்தல் சபைகளுடனும் ஒத்துழைப்புக்களைப் பேணுதல் நுண்ணறிவினையும் சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்துகொள்வதற்கு இன்றியமையாததாகும். முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் அண்மிய போக்குகளையும் அபிவிருத்திகளையும் பற்றி தகவல்களுடன் அறிந்துகொள்வதற்காக தொழில்துறை முன்னரங்குகளில் பங்கேற்கவேண்டும் என்பதுடன் இணையப் பாதுகாப்பு பணிக் குழுக்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். அத்துடன் ஒழுங்குமுறைப்படுத்தல் சபைகளுடன் ஈடுபாடு கொண்டிருத்தலும் வேண்டும். ஒத்துழைப்பு, நெருக்கடியான நேரத்தில் ஆதரவு வழங்கக்கூடிய நம்பிக்கை மிக்க பங்காளர்களின் வலையமைப்பினைக் கட்டியெழுப்புவதற்கு முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்களுக்கு உதவும்.

### 8.5 இணைய பாதுகாப்புத் திறனில் முதலீடுகளைச் செய்தல்

காத்திரமான இணையப் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கு தேர்ச்சியும் அறிவாற்றலும் மிக்க இணையப் பாதுகாப்பு அணியொன்றினை கட்டியெழுப்புவது இன்றியமையாததாகும். முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் உயர்திறன்வாய்ந்தவர்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கும் தக்கவைத்துக்கொள்வதற்கும்

அதேபோன்று, தற்போது இடம்பெற்றுவரும் பயிற்சி மற்றும் அவர்களது அணியினருக்கான அபிவிருத்தி வாய்ப்புக்களிலும் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். வலுவான இணையப் பாதுகாப்பு அணியினரை கட்டியெழுப்புவதன் மூலம் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் அவர்களது நிறுவனங்கள் தோற்றம்பெற்றுவரும் அச்சுறுத்தல்களைக் கையாள்வதற்கு நன்கு பலப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதனை உறுதிப்படுத்தமுடியும்.

## 9. விடய ஆய்வுகள் மற்றும் சிறந்த நடைமுறைகள்

காத்திரமான இணையப் பாதுகாப்பு முகாமைத்துவத்தின் தாக்கத்தினை தெளிவுபடுத்துவதற்காக, இப்பிரிவு பல விடய ஆய்வுகளையும் சிறந்த நடைமுறைகளையும் முன்னணி நிதியியல் நிறுவனங்களிலிருந்து சமர்ப்பித்திருக்கிறது.

### 9.1 விடய ஆய்வு: ஜேபி மோர்கன் சேஷ்

ஜே. பி. மோர்கன் சேஷ் உலகிலுள்ள மிகப்பாரியதும் முதன்மை வாய்ந்ததுமான நிதியியல் நிறுவனங்களில் ஒன்றாகும். இக்கம்பனி அதன் சொத்துக்களை பாதுகாப்பதற்காக கணிசமான முதலீடொன்றாக ஐ.அ.டொலர் 600 மில்லியனுக்கு மேற்பட்ட வருடாந்த வரவுசெலவுத் திட்டத் தொகையொன்றினை இணையப் பாதுகாப்பிற்காக மேற்கொண்டது. ஜே. பி. மோர்கன் சேஷியின் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் தொடர்ச்சியான கண்காணிப்பு, அச்சுறுத்தல் உளவறிதல், மற்றும் ஊழியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய பரந்தளவிலான இணையப் பாதுகாப்பு உபாயமொன்றினை நடைமுறைப்படுத்தியிருக்கின்றார். இதன்விளைவாக, கம்பனி அச்சுறுத்தல்களை மிகக் காத்திரமான விதத்தில் கண்டுபிடிக்கக்கூடியதாகவும் அதற்குப் பதிலிறுத்தக்கூடியதாகவும் இருந்ததுடன் இணைய சம்பவங்களின் தாக்கத்தினை குறைக்கக்கூடியதாகவும் இருந்தது. (ஜே. பி. மோர்கன் சேஷி 2021)

### 9.2 விடய ஆய்வு: எச். எஸ். பீ. சி

எச்எஸ்பிசி இணையப் பாதுகாப்பிற்கு முன்னுரிமையளித்து வருகின்ற மற்றொரு முன்னணி நிதியியல் நிறுவனமாக விளங்குகிறது. கம்பனியின் முதன்மை தகவல் பாதுகாப்பு அதிகாரி, மிக நெருக்கடியான இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதன் மீதும் தணிப்பதன் மீதும் கவனம் செலுத்துகின்ற இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட இணையப் பாதுகாப்பினை நடைமுறைப்படுத்தி வருகின்றது. எச்எஸ்பிசி அதன் அச்சுறுத்தல்களைக் கண்டுபிடிக்கும் இயலாற்றலை அதிகரிப்பதற்காக செயற்கை நுண்ணறிவுகளினதும் கணனிகளைப்பயில்தல் போன்ற முன்னேற்றங்கண்ட பாதுகாப்பு தொழில்நுட்பங்களில் முதலீடு செய்திருக்கிறது. இணையப் பாதுகாப்புத் தொடர்பில் முன்கூட்டிய அணுகுமுறையொன்றினை கடைப்பிடிப்பதன் மூலம் எச்எஸ்பீசி அதன் பாதுகாப்பினைப் பலப்படுத்திக்கொள்ளக்கூடியதாகவும் வாடிக்கையாளர்களது தரவுகளை பாதுகாத்துக்கொள்ளக்கூடியதாகவும் இருந்தது. (எச்எஸ்பிசி யூஎஸ்ஏ இன்ரநஷனல், 2024).

### 9.3 சிறந்த நடைமுறை: ஊழியர்களின் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்.

மனித வழுவின் காரணமாக ஏற்படுகின்ற பாதுகாப்பு மீறல்களின் இடர்நேர்வினைத் தணிப்பதற்கான மிகத்தந்திரமான வழிகளிலொன்று பரந்தளவிலான ஊழியர் பயிற்சிகளையும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதாகும். கோல்ட்மான் சசஸ் மற்றும் பாங் ஒவ் அமெரிக்கா போன்ற நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் ஊழியர்களுக்கு இணையப் பாதுகாப்பு மற்றும் சிறந்த நடைமுறை பற்றியும் நிறுவனத்தின் சொத்துக்களை பாதுகாப்பதில் அவை ஆற்றும் வகிபாகம் பற்றியும் அவர்களுக்கு அறிவூட்டுவதற்காக விரிவான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்திருக்கின்றன. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் கிரமமான பயிற்சி அமர்வுகள், தந்திரமாக ஏமாற்றும் மாதிரிப்படுத்தல்கள் மற்றும் இணையப் பாதுகாப்பு முக்கியத்துவத்தினை வலுப்படுத்துகின்ற விழிப்புணர்வு பிரச்சாரங்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

### 9.4 சிறந்த நடைமுறை: சம்பவத்திற்கு பதிலிறுத்தும் திட்டமிடல்

நன்கு வரையறை செய்யப்பட்ட சம்பவத்திற்கு பதிலிறுத்தும் திட்டம் இணையப் பாதுகாப்பு சம்பங்களை காத்திரமான விதத்தில் முகாமைப்படுத்துவதற்கு மிக இன்றியமையாததாகும். சிட்டி வங்கி, வெல்ஸ் பார்கோ போன்ற நிதியியல் நிறுவனங்கள் பாதுகாப்பு மீறல்கள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடும் உத்வேகம் மிக்க சம்பவங்களின் பதிலிறுப்புத் திட்டங்களை அபிவிருத்தி செய்திருந்தன. இத்திட்டங்கள் மீறல்களை அடையாளம்

காணுதல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை முறைகள், பாதிக்கப்பட்ட ஆர்வலர்களைக் கவனித்தல் மற்றும் மேம்பாட்டிற்கான துறைகளை அடையாளம் காண்பதற்காக சம்பவங்களுக்குப் பின்னரான பகுப்பாய்வுகளை நடத்துதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. தெளிவானதும் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடியதுமான சம்பவங்களுக்கு பதிலிறுத்தும் திட்டங்களைக் கொண்டிருப்பதன் மூலம், இந்நிறுவனங்கள் நிகழ்வுகளுக்கு கூடியளவு காத்திரமான விதத்தில் பதிலிறுத்தக்கூடியனவாக இருந்ததுடன் அவற்றின் தாக்கத்தினையும் குறைத்தன.

## 10. நிதியியல் நிறுவனங்களில் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் வகிபாகத்தின் எதிர்காலம்

இணைய அச்சுறுத்தல் தோற்றமைப்பு தொடர்ந்தும் பரிணமிக்கின்றதற்கேற்ப, முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் முக்கியத்துவம் மிக்கவராக திகழ்கின்றார். இணையப் பாதுகாபபின் எதிர்காலப் போக்குகள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்.

### 10.1 செயற்கை நுண்ணறிவு மற்றும் கணனித் தரவுப் பயில்தல்களின் அதிகரித்த பயன்பாடு

இணையப் பாதுகாப்பில், செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் தொழில்நுட்பங்கள் ஆற்றும் வகிபாகம் கணிசமானளவிற்கு அதிகரித்து வருகின்றது. இத்தொழில்நுட்பங்கள் அச்சுறுத்தல்களை மிக விரைவாகவும் துல்லியமாகவும் கண்டறியவும் அதற்கு பதிலிறுத்தவும் நிறுவனங்களுக்கு உதவுகின்றன. கார்ட்னரின் அறிக்கையின்படி செயற்கை நுண்ணறிவும் இயந்திரக் கற்றலும் அச்சுறுத்தல்களைக் கண்டறிதல் மற்றும் பதிலிறுத்தல் இயலாற்றலை உயர்த்திக்கொள்வதற்கு இன்றியமையாதனவாகும் (கார்ட்னர் 2023). முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் இத்தொழில்நுட்பங்களில் ஏற்படுகின்ற அண்மைய முன்னேற்றங்களை சரியான தகவல்களுடன் முன்கூட்டியே அறிந்துகொள்வதும் அவற்றினை தமது இணையவழிப் பாதுகாப்பு உபாயங்களுடன் ஒருங்கிணைத்துக் கொள்வதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து கொள்வதும் அவசியமாகும்.

### 10.2 தரவு இரகசியங்கள் மீதான பாரிய வலியுறுத்தல்கள்

தரவு இரகசியங்கள் என்பது நிதியியல் நிறுவனங்களுக்கு தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவு கரிசனைக்குரிய விடயங்களாகவே இருக்கும். கலிபோனியா வாடிக்கையாளர் இரகசியச் சட்டம் மற்றும் பொதுத் தரவுப் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளைப் போன்ற புதிய தரவு இரகசிய ஒழுங்குவிதிகளின் அறிமுகம் வாடிக்கையாளர்களின் தரவுகளைப் பாதுகாப்பதற்கான முக்கித்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றன. முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் தமது நிறுவனத்தின் வாடிக்கையாளர் தகவல்களை பாதுகாப்பதற்கு இவ்வொழுங்குவிதிகளுடன் இணங்கி நடப்பதனையும் நடைமுறைப்படுத்தப்படுவதனையும் உறுதிப்படுத்திக்கொள்வது அவசியமாகும்.

### 10.3 இணையப் பாதுகாப்பு திறன்களை விரிவாக்குதல்

தேர்ச்சிபெற்ற இணையப் பாதுகாப்பு தொழில்சார் நிபுணர்களுக்கான கேள்வி தொடர்ந்தும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இணையப் பாதுகாப்பு தொழிற்படையின்படி, இணையப் பாதுகாப்பு தொழில்சார் நிபுணர்களுக்கான உலகளாவிய பற்றாக்குறை 3 மில்லியனுக்கும் கூடுதலானதாகும் (ISC 2023). முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்களின் இத்திறன் இடைவெளியினைக் கட்டுப்படுத்துவதற்கும் அவர்களது நிறுவனம் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் வலுவான இணையப் பாதுகாப்பு அணியொன்றினை கட்டியெழுப்பி அதனை தக்கவைத்துக்கொள்வதற்கு ஏற்ற விதத்தில் முதலீடுகளை மேற்கொள்வது அவசியமாகும்.

### 10.4 ஒத்துழைப்பு மற்றும் தகவல்களை அதிகரித்தளவில் பகிர்ந்து கொள்ளுதல்

ஒத்துழைப்பும் தகவல்களை பகிர்ந்துகொள்வதும் தோற்றம்பெற்றுவரும் அச்சுறுத்தல்களை முன்கூட்டியே எதிர்கொள்வதற்குத் தயாராக இருப்பதற்கு மிக முக்கியமானதாகும். நிதியியல் நிறுவனங்கள் நுண்ணறிவினையும் சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்துகொள்ளும் விதத்தில் சக தொழில்துறையினர், ஒழுங்குமுறைப்படுத்தல் சவால்கள் மற்றும் அரச முகவர்களுடன் நெருக்கமாக பணியாற்றுவது அவசியமாகும். முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் இவ்வொத்துழைப்பு முயற்சிகளை பேணிவளர்ப்பதிலும் தமது நிறுவனங்கள் பகிரப்பட்ட அறிவு மற்றும் சிந்தனைகளிலிருந்து நன்மைகளை பெற்றுக்கொண்டிருக்கிறது என்பதனை உறுதிப்படுத்துவதிலும் முக்கிய வகிபாகத்தினை ஆற்றுதல் வேண்டும்.

### 10.5 பூஜ்ய நம்பிக்கை எண்ணக்கருவைக் கடைப்பிடித்தல்

பூஜ்ய நம்பிக்கை எண்ணக்கரு என்பது மூலவளங்களை அணுகுவதற்கான வசதியை வழங்குவதற்கு முன்னர் பயன்படுத்துநர்களினதும் சாதனங்களினதும் அடையாளங்களை சரிபார்ப்பதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்ற தோற்றம்பெற்றறுவருகின்ற ஒரு பாதுகாப்பு மாதிரியாகும். வொறஸ்ரர் றிசேர்ச்சின்படி, பூஜ்ய நம்பிக்கை தத்துவங்கள் நிதியியல் நிறுவனங்களை பாதுகாப்பதற்கு அதிகளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக விரைவில் மாறும் (வொறஸ்ரர், 2023). முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் தமது நிறுவனங்களின் பாதுகாப்பு நிலைப்பாட்டினை அதிகரிப்பதற்கும் அதிகாரமளிக்கப்படாத அணுகுவிதிகளுக்கெதிராக பாதுகாப்பினை பெற்றுக்கொள்வதற்கும் பூஜ்ய நம்பிக்கைக் எண்ணக்கருவினைப் பயன்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

### 11. முடிவுரை

இணைய அச்சுறுத்தல்கள் அதி நவீனத்தன்மைகளுடன் அதிகரித்து வருகின்றதும் வியாபித்து இருக்கின்றதுமான நவீன நிதியியல் தோற்றப்பாட்டில் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் வகிபாகம் மிக முக்கியமானதாகக் காணப்படுகிறது. உத்வேகம் மிக்க உபாயங்களை அபிவிருத்தி செய்வதன் மூலமும் இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதன் வாயிலாகவும் பாதுகாப்பு மன உணர்வுக் கலாசாரத்தினைப் பேணிப் பாதுகாப்பதன் மூலமும் ஒத்துழைப்பினை ஊக்குவிப்பதன் மூலமும் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் இணைய அச்சுறுத்தல்களிலிருந்து நிதியியல் நிறுவனங்களைப் பாதுகாத்துக்கொள்வதில் இன்றியமையாத வகிபாகத்தினை ஆற்றுகின்றனர். முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் சவால்களை எதிர்நோக்குகின்றடைக்கிடையிலும், அவர்கள், தொடர்ச்சியான அணுகுமுறை, அடுக்குப்படுத்தப்பட்ட பாதுகாப்பு வழிமுறைகள், தொழில்துறை ஒத்துழைப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு திறன்களில் முதலீடுகளை மேற்கொள்ளுதல் போன்ற முக்கியமான உபாயங்களை கடைப்பிடிப்பதன் மூலம் இணையப் பாதுகாப்பினை காத்திரமாக முகாமைப்படுத்தமுடிகிறது.

இணைய அச்சுறுத்தல் தோற்றப்பாடு தொடர்ச்சியாக பரிணாமமடைந்து வருவதனால் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் செயற்கை நுண்ணறிவு மற்றும் கணனித்தரவுப் பயில்தல்களின் முன்னேற்றகரமான தன்மை, தரவு, இரகசிய ஒழுங்குவிதிகள், இணையப் பாதுகாப்புத் திறன்களின் விரிவாக்கம், அதிகரித்த ஒத்துழைப்பு மற்றும் பூஜ்ய நம்பிக்கை எண்ணக்கருக்களை கடைப்பிடித்தல் உட்பட பிந்திய போக்குகள் மற்றும் அபிவிருத்திகள் பற்றி முன்கூட்டியே தகவல்களை அடிப்படையாகக் கொண்டிருப்பது அவசியமாகும். இப்போக்குகள் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு முன்கூட்டியே அறிந்திருப்பதன் மூலமும் அவர்களது உபாயங்களை தொடர்ச்சியாகப் பின்பற்றுவதன் மூலமும் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்கள் அவர்களது நிறுவனங்கள் தொடர்ந்தும் மீளெழுச்சியுடன் இருப்பதனையும் என்றும் மாற்றமடைந்துவரும் இணைய அச்சுறுத்தலின் பின்னணியில் பாதுகாப்பாக இருப்பதனையும் உறுதிப்படுத்தமுடியும்.

**உசாத்துணை:**


1. Accenture (2021) The Cost of Cybercrime. Available at: https://www.accenture.com/us-en/insights/security/cost-cybercrime-study
2. Basel Committee on Banking Supervision (2021) Revisions to the Principles for the Sound Management of Operational Risk. Available at: https://www.bis.org/bcbs/publ/d515.pdf
3. Capital One (2019) Capital One Announces Data Security Incident. Available at: https://www.capitalone.com/about/newsroom/capital-one-announces-data-security-incident
4. Center for Internet Security (CIS) (2022) CIS Controls. Available at: https://www.cisecurity.org/controls
5. Cybersecurity and Infrastructure Security Agency (CISA) (2021) Remediating the SolarWinds and Active Directory/M365 Compromise. Available at: https://www.cisa.gov/remediating-solarwinds-and-active-directorym365-compromise
6. Cybersecurity Ventures (2024) Cybersecurity Statistics and Facts. Available at: https://cybersecurityventures.com
7. Data Protection Authority Sri Lanka (2022) Personal Data Protection Act, No. 9 of 2022. Available at: https://www.dpa.gov.lk
8. Deloitte (2022) The Deloitte Consumer Privacy Study. Available at: https://www2.deloitte.com/us/en/

insights/industry/financial-services/global-privacy-study.html

9. European Union (2022) General Data Protection Regulation (GDPR). Available at: https://gdpr.eu

10. European Union Agency for Cybersecurity (ENISA) (2022) Threat Landscape 2022. Available at: https://www.enisa.europa.eu/publications/enisa-threat-landscape-2022

11. Federal Trade Commission (2022) Gramm-Leach-Bliley Act. Available at: https://www.ftc.gov/enforcement/statutes/gramm-lea

12. Financial Stability Board (FSB) (2023) Effective Practices for Cyber Incident Response and Recovery. Available at: https://www.fsb.org/2023/01/effective-practices-for-cyber-incident-response-and-recovery

13. Forbes Advisor (2024) Cybersecurity Statistics and Facts. Available at: https://www.forbes.com/advisor/education/it-and-tech/cybersecurity-statistics

14. Forrester Research (2023) Zero Trust Extended Ecosystem Platform Providers. Available at: https://www.forrester.com/report/the-forrester-wave-zero-trust-extended-ecosystem-platform-providers-q2-2023/RES157638

15. Gartner (2022) Top Trends in Cybersecurity. Available at: https://www.gartner.com/en/doc/761902-gartner-top-trends-in-cybersecurity-2022

16. Gartner (2023) Top Trends in Cybersecurity. Available at: https://www.gartner.com/en/doc/761902-gartner-top-trends-in-cybersecurity-2023

17. HSBC USA Inc. (2023) Form 10-K Annual Report for the fiscal year ended December 31, 2023, to U.S. Securities and Exchange Commission (SEC). Available at: https://www.sec.gov/Archives/edgar/data/83246/000008324624000004/hsbcusa-20231231.htm

18. IBM Security (2022) Cost of a Data Breach Report 2022. Available at: https://www.ibm.com/security/data-breach.

19. International Monetary Fund (IMF) (2023) Cyber Risk Supervision and the IMF’s Role. Available at: https://www.imf.org/en/Publications/WP/Issues/2023/03/01/Cyber-Risk-Supervision-and-the-IMFs-Role-521999

20. ISC² (2023) Cybersecurity Workforce Study. Available at: https://www.isc2.org/Research/Workforce-Study

21. ISO (2022) ISO/IEC 27001, ISO/IEC 27701, ISO/IEC 31000. Available at: https://www.iso.org

22. JPMorgan Chase (2021) Annual Report. Available at: https://www.jpmorganchase.com/content/dam/jpmc/jpmorgan-chase-and-co/investor-relations/documents/annualreport.pdf

23. National Institute of Standards and Technology (NIST) (2022) Cybersecurity Framework. Available at: https://www.nist.gov/cyberframework

24. Open Web Application Security Project (OWASP) (2022) OWASP Top Ten. Available at: https://owasp.org/www-project-top-ten

25. PCI Security Standards Council (2022) Payment Card Industry Data Security Standard (PCI DSS) Requirements and Security Assessment Procedures. Available at: https://www.pcisecuritystandards.org/documents/PCI_DSS_v3-2-1.pdf

26. Reuters (2016) Exclusive - Bangladesh Bank hackers compromised SWIFT software, warning issued. Available at: https://www.reuters.com/article/world/exclusive-bangladesh-bank-hackers-compromised-swift-software-warning-issued-idUSKCN0XM0DW

27. SANS Institute (2022) SANS 2022 SOC Survey: Optimizing SOC Operations and Collaboration. Available at: https://www.sans.org/white-papers/sans-2022-soc-survey

28. SWIFT (2024) Customer Security Programme (CSP). Available at: https://www2.swift.com/knowledgecentre/products/Customer%20Security%20Programme

29. Symantec (2022) Internet Security Threat Report. Available at: https://symantec-enterprise-blogs.security.com/blogs/threat-intelligence/internet-security-threat-report-2022

30. Verizon (2023) Data Breach Investigations Report 2023. Available at: https://www.verizon.com/business/resources/reports/dbir

# உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஏற்புடைய சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்தல்: வங்கித்தொழில் சட்டத்திற்கான திருத்தங்கள்




**டபிள்யு ஜி என் பி குமாரி**
பிரதிப் பணிப்பாளர்
வங்கி மேற்பார்வைத் திணைக்களம்


**அறிமுகம்**

இலங்கையின் உச்ச நிதியியல் நிறுவனமாக விளங்கிவரும் இலங்கை மத்திய வங்கி, நாட்டின் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை பேணிப் பாதுகாத்துக்கொள்ளும் நியதிச் சட்டப் பொறுப்பினைக் கொண்டிருக்கிறது. 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் நியதிகளில், இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோள் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைவதும் அதனைப் பேணுவதுமாக இருப்பதுடன், மற்றைய குறிக்கோள் நிதியியல் முறைமை உறுப்பாட்டினைப் பாதுகாத்துக்கொள்வதாகும். மேலும் எடுத்துக்காட்டப்பட்ட சட்டத்தின் 61ஆம் பிரிவின் நியதிகளில் இலங்கை மத்திய வங்கி ஒழுங்குபடுத்தல்கள், உரிமம் வழங்கல், பதிவு செய்தல் மற்றும் இலங்கையிலுள்ள நிதியியல் நிறுவனங்களை மேற்பார்வை செய்வதற்கான பிரத்தியேக அதிகாரசபையாகவும் காணப்படுகிறது.

வங்கித்தொழில் துறை, நிதியியல் துறையின் மொத்தச் சொத்துக்களில் 62 சதவீதத்திற்கு வகைகூறுவதுடன் 24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் (2 அரசிற்குச் சொந்தமான வங்கிகளும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட 11 வங்கிகளும் உட்பட) 6 உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்குகிறது. 2024 செத்தெம்பர் 30இல் உள்ளவாறு, வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள் ரூ.21.2 றில்லியன்களாக விளங்கி ரூ.17.3 றில்லியன் வைப்புக்களையும் ரூ.11.3 றில்லியன் கடன்கள் மற்றும் முற்பணங்களையும் உள்ளடக்கியிருந்தன. வங்கித்தொழில் துறை முக்கியமாக வைப்பாளர்களின் நிதியின் மூலம் நிதியிடப்படுவதுடன் வைப்பாளர்களினதும் ஆர்வலர்களினதும் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதும் வங்கித்தொழில் முறைமையில் அவர்களின் நம்பிக்கையினைப் பேணுவதும் மிக இன்றியமையாததாகும். வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் பேணிக்காக்கும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி அதன் சட்டங்கள் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகள் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருப்பதுடன் அதன் நியதிச்சட்டப் பொறுப்புக்களை ஆற்றுவதற்கு முன்கூட்டியே செயற்பாடு சார்ந்த வழிமுறைகளையும் முன்னெடுக்கிறது.

**1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திற்கான திருத்தங்கள்**

திருத்தப்பட்டவாறான, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டமானது உரிமம் வழங்குதல், வங்கித்தொழில் வியாபாரத்தினைக் கொண்டு நடத்துகின்ற ஆட்களை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் அத்தகைய உரிமம்பெற்ற வங்கிகள் தொடர்பான விடயங்களைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான பிரதான சட்டவாக்கமாகக் காணப்படுகிறது. வங்கித்தொழில் சட்டம் 2006இல் இறுதியாக

திருத்தப்பட்டதுடன், தற்போதைய ஒழுங்குமுறைப்படுத்தல்கள் மற்றும் சந்தை அபிவிருத்திகள், வங்கித்தொழிலின் சிறந்த பன்னாட்டு நடைமுறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்பனவற்றிற்கேற்ப இலங்கை மத்திய வங்கி, வங்கித்தொழில் சட்டத்தினைத் திருத்துவதற்குத் தேவையான வழிமுறைகளை முன்னெடுத்தது. இம்முன்னெடுப்புக்கள், நிதியியல் துறையுடன் தொடர்பான மற்றைய முக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் சீர்திருத்தங்களுடன், விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமைப்பியல் அடித்தள அளவுக் குறியீடொன்றினை நிர்ணயித்ததன் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. வங்கிகளின் ஆற்றல்வாய்ந்த முன்மதியுடைய ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் மேற்பார்வைக்கான குறைந்தபட்ச நியமங்களை நிர்ணயித்து வங்கித்தொழில் மேற்பார்வைக்கான பாசல் குழுவினால் விடுக்கப்பட்ட காத்திரமான வங்கித்தொழில் மேற்பார்வைக்கான மையக் கோட்பாடுகள், வங்கித்தொழில் சட்டத்தினைத் திருத்துவதில் பொருத்தமானதொன்றாக இருப்பதற்கு பங்களித்தன.

இதற்கமைய, வங்கித்தொழில் (திருத்தச்) சட்ட மூலம் 2024 ஏப்பிறலில் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதுடன் 2024 யூன் 15 இலிருந்து 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டமாகத் தொழிற்பாட்டிற்கு வந்தது.

**வங்கித்தொழில் சட்டத்திற்கான முக்கிய திருத்தங்கள்**

2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தின் மூலமாக வங்கித்தொழில் சட்டத்திற்கு பின்வரும் முக்கிய திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

i. **உரிமம் வழங்கல் தொடர்பான குறைந்தபட்ச தேவைப்பாடுகள்:** சட்டத்திலுள்ள ஆவணப்படுத்தல் தேவைப்பாடுகளுக்குப் புறம்பாக, வங்கி உரிமத்திற்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையினை பெறுவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பிரமாணங்கள் குறைந்தபட்ச நுழைவு மூலதனத் தேவைப்பாடுகள், நிதியியல் மூலங்களின் தன்மை மற்றும் போதுமாந்தன்மை, முக்கிய பங்குடமையாளரின் பொருத்தம், பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினரின் பொருத்தம் மற்றும் தகுதி, சொத்துடமைக் கட்டமைப்பின் வெளிப்படைத்தன்மை, விண்ணப்பதாரியின் பயன்பெறு சொத்தாண்மை என்பனவற்றை உள்ளடக்குகிறது.

ii. **பங்குடமையாளரின் பொருத்தத்தன்மை:** உரிமம்பெற்ற வர்த்த வங்கியொன்றில் முக்கிய அக்கறைகளை கையேற்பதற்கான ஒப்புதலை வழங்குகின்ற நோக்கத்திற்காக பங்குடமையாளர்களின் பொருத்தத்தினை மதிப்பிடுவதற்காக புதிய ஏற்பாடொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. (அதாவது, வாக்களிக்கும் உரிமையினைக் கொண்டுள்ள வழங்கப்பட்ட மூலதனத்தில் 10 சதவீதத்திற்கு மேல்), இது தொடர்பில், இலங்கை மத்திய வங்கி மற்றைய விடயங்களுடன் நிதியியல் மூலவளங்களின் தன்மை மற்றும் போதுமான அளவு, வியாபாரத்திட்டங்களின் ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் சாத்தியத்தன்மை, வியாபாரத்தின் கடந்தகால பெறுபேறுகள் மற்றும் அனுபவம், சொத்துடமைக் கட்டமைப்பின் வெளிப்படைத்தன்மை மற்றும் விண்ணப்பதாரியின் பயன்பெறு சொத்தாண்மை என்பனவற்றையும் பரிசீலனையில் கொள்ளலாம்.

iii. **வெளிநாட்டு வங்கிகளை துணை நிறுவனங்களாக்குதல்:** தற்பொழுது வெளிநாட்டு வங்கிகள் இலங்கையில் கிளைகளாக தொழிற்படுகின்றன. ஆகவே, எதிர்காலத்தில் இலங்கைக்குள் நுழைகின்ற வெளிநாட்டு வங்கிகளின் கிளைகள் ஒன்றில் துணை நிறுவனமொன்றாகவோ அல்லது கிளையொன்றாகவோ தொழிற்படுவதற்கு கூட்டிணைக்கப்படவேண்டும் என்பதனை குறித்துரைக்கும் விதத்தில் புதிய ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இலங்கை மத்திய வங்கிக்கு மற்றைய விடயங்களுடன் நிதியியல் நிலைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மை, இடர்நேர்வு முகாமைத்துவம், ஆளுகைக் கட்டமைப்பு, மூலதனப் போதுமைத்தன்மை மற்றும் திரவத்தன்மையின் கிடைப்பனவு என்பனவற்றை பரிசீலனையில் கொண்டு தற்போதுள்ள ஏதேனும் வெளிநாட்டு வங்கியை துணை நிறுவனமயப்படுத்துமாறு கேட்டுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

iv. **வங்கிச் சொத்துடமை:** வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளில், அமைச்சரின் சம்மதத்துடன்கூடிய ஆளுகைச் சபையின் எழுத்துமூலமான முன்னொப்புதல் இல்லாமல் தனிப்பட்ட ஒருவர் பங்குடமையாளர், அல்லது கம்பனிச் சபை ஒன்றில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது நியமனத்தரொருவரூடாகவோ அல்லது வேறு தனிப்பட்டவர்களுடன் சேர்த்து பொதுவான இலக்கிற்காக தொழிற்படுபவரூடாகவோ பங்குடமை அல்லது கம்பனிச் சபை ஊடாகவோ உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றின் முக்கிய அக்கறைகளை கையேற்கக்கூடாது. “குறிப்பிட்ட அக்கறை” என்பதற்கான வரைவிலக்கணம் “கணிசமான செல்வாக்கு” என்பதனை உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டிருக்கிறது. இதில் இலங்கை மத்திய வங்கி பணிப்பாளர், முதன்மை நிறைவேற்று அலுவலர் அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை நியமனம் செய்வதற்கு, நியமிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு அல்லது ஒப்பந்தமொன்றினை அல்லது வேறேதேனும் விதத்தில்

அவற்றினைத் தொடர்வதற்கான கொள்கைகள் தொடர்பில் கட்டுப்பாடுகளைப் புரிவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கு இருக்கும் கணிசமான செல்வாக்கு பற்றி தீர்மானிக்கமுடியும். மேலும், அத்தகைய பங்குடமைகளுக்கு உரித்தான வாக்களிக்கும் உரிமைகளைப் புரிவதனை இடைநிறுத்துதல், குறித்துரைக்கப்பட்ட நேரத்திற்குள் பங்குகளை கையுதிர்த்தல் அல்லது விற்றல், அத்தகைய பங்குகளுக்கான பங்குலாபங்களை ஒன்று சேர்க்காமை, ஏதேனும் பங்கீடு உட்பட ஏதேனும் முகாமைத்துவத்தின் கீழ் உள்ள சொத்து போன்ற கணிசமான அக்கறைகளைக் கையேற்பது தொடர்பான ஏற்பாடுகளை மீறுகின்றமை தொடர்பில் வலுப்படுத்தப்பட்ட வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

v. **கையேற்றல், இணைத்தல் மற்றும் ஒன்றாக்குதல்:** உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் வியாபாரத்தினை அல்லது வியாபாரத்தின் ஒரு பகுதியை கையேற்பதனையும் அதேபோன்று உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அதன் வியாபாரம் முழுவதனையுமோ அல்லது ஒரு பகுதியையோ விற்பனை செய்வதனை இயலுமைப்படுத்துகின்ற விதத்தில் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றுடன் இணைக்கப்படுவதற்கு அல்லது ஒன்றாக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. மேலும், இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் அல்லது மேற்பார்வைக்குட்பட்டு மற்றொரு நிதி நிறுவனத்தின் வியாபாரத்தினை அல்லது வியாபாரத்தின் ஒரு பகுதியை கையேற்பதனை இயலுமைப்படுத்துகின்ற விதத்தில் ஏற்பாடு சேர்க்கப்பட்டுள்ளது.

vi. **நிதியல்லா துணை நிறுவனங்களை கையுதிர்த்தல்:** வங்கிகள் அவற்றின் வங்கித்தொழில் வியாபாரத்தின் மீதும் உரிமம்பெற்ற வங்கிக்கு மூலவளங்களை காத்திரமான விதத்தில் ஒதுக்குவதன் மீதும் கவனம் செலுத்துவதனை இயலுமைப்படுத்துகின்ற விதத்தில் ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதற்கேற்ப, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற வங்கிக்கு அல்லது வங்கித்தொழில் குழுமத்திற்கு பணிகளை வழங்காத நிதியல்லா துணை நிறுவனங்களின் சொத்தாண்மையினை உரித்து நீக்கம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. இது தொடர்பில் 05 ஆண்டுகள் இடை ஏற்பாட்டுக்காலம் வழங்கப்பட்டிருக்கிறது.

vii. **ஒருங்கிணைக்கப்பட்ட மேற்பார்வை:** திருத்தங்களின் படி இலங்கை மத்திய வங்கிக்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளை அவற்றின் துணை நிறுவனங்கள் உட்பட தனியான அடிப்படையில் அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படையில் பரீட்சிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

viii. **விகித சமத்துவம்:** முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் மீதான மேற்பார்வையினை வலுப்படுத்தும் அதேவேளையில் சிறிய வங்கிகளின் இணங்குவிப்பு தொடர்பான செலவுகளை குறைக்கும் பொருட்டு வங்கிச் சொத்துக்களின் பருமன், அளவு, பல்லினத்தன்மை மற்றும் தொழிற்பாட்டின் சிக்கலான தன்மை என்பனவற்றின் அடிப்படையில் வேறுபடுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை கடைப்பிடிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ix. **திரவச் சொத்தக்கள்:** சட்டத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள (நியதிச்சட்ட திரவச்சொத்து விகிதம்) திரவத்தன்மை தேவைப்பாடுகள் தொடர்பான விடயங்கள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினதும் திரவத்தன்மையின் உண்மையான நிலைமையினைப் பிரதிபலிக்காத பின்னோக்கிய அணுகுமுறைகளைக் கொண்டிருந்தமையினால் அவை இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன. இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான உரிமம்பெற்ற வங்கிகளின் பொறுப்புக்களைப் பூர்த்திசெய்யும் விதத்தில் திரவச் சொத்துக்களைப் பேணுமாறு அவ்வங்கிகளைக் கேட்டுக்கொள்வதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளில் காணப்படுகின்ற அபிவிருத்திகள் தொடர்பிலான திரவத்தன்மை தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுமாறு கோருவதற்குப் பதிலாக இலங்கை மத்திய வங்கி நடைமுறைச்சாத்தியமானளவிற்கு திரவத்தன்மை தேவைப்பாடுகளின் மீது ஏற்புடைத்தான பன்னாட்டு நியமங்களைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்ளும். மேலும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினால் பேணப்பட வேண்டும் என தேவைப்படுத்தப்பட்ட மேலதிக திரவச்சொத்து தேவைப்பாடுகளை இலங்கை மத்திய வங்கி தீர்மானிக்கமுடியும் என்பதுடன் உரிமம்பெற்ற வங்கிகள், இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய சொத்துக்களை பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

x. **மூலதனம்:** உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வியாபாரத்திலிருந்து தோன்றுகின்ற குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுகளைப் பரிசீலனையில் கொண்டு பொருத்தமானவாறு மேலதிக மூலதனத்தினைப்

பேணுமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளைக் கேட்டுக்கொள்ளும் விதத்தில் இலங்கை மத்திய வங்கிக்காக புதிய ஏற்பாடொன்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

xi. **பங்கிலாபக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள்:** திருத்தங்களின் நியதிகளுக்கமைய, பொருத்தமானவிடத்து, ஏதேனும் பங்கிலாபக் கொடுப்பனவுகளுக்கு அல்லது இலங்கையில் ஈட்டப்பட்ட இலாபங்களை மாற்றல் செய்வதற்குமுன்னதாக வங்கிகளினால் தேவைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலதனம் அல்லது திரவத்தன்மை மட்டங்களைப் பரிசீலனையில் கொண்டு இலங்கை மத்திய வங்கி பணிப்புரைகளை விடுக்கலாம்.

xii. **கணக்குகள் மற்றும் கணக்காய்வு:** வங்கிகளினால் நிதியியல் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய காலவரையறை 5 மாதங்களிலிருந்து 3 மாதங்களுக்கு மாற்றப்பட்டிருப்பதுடன் கணக்காய்வாளர் நிதியியல் ஆண்டு முடிவடைவதிலிருந்து 2 மாதங்களுக்குள் (முன்னர் 3 மாதங்கள்) கணக்காய்வு அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். வெளிவாரிக் கணக்காய்வாளரைப் பொறுத்தவரையில், புதிய ஏற்பாடு, வங்கியின் வெளிவாரிக் கணக்காய்வாளர் ஒவ்வொரு ஆறு ஆண்டுகளுக்குமொருமுறை மாற்றப்பட வேண்டும் எனவும் கணக்காய்வுக் குழுவின் முக்கிய பொறுப்பாளர் 03 ஆண்டுகளுக்கொருமுறை மாற்றப்படவேண்டும் எனவும் குறிப்பிடுகிறது. இது தொடர்பில் இரண்டாண்டுகளைக் கொண்ட இடை ஏற்பாட்டுக் காலம் வழங்கப்பட்டிருக்கிறது.

xiii. **பாரிய வெளிப்படுத்துகை:** உரிமம்பெற்ற வங்கிகளின் கொடுகடன் திரட்சி இடர்நேர்வினைக் குறைக்கும் நோக்குடன், உரிமம்பெற்ற வங்கியின் மூலதனத்துடன் பொருந்திச் செல்லக்கூடிய விதத்தில் அதனால் வழங்கப்படக்கூடிய பாரிய வெளிப்படுத்துகை[1] மீதான ஏற்பாடுகள் "கட்டுப்பாட்டு உறவு முறை" மற்றும் "பொருளாதாரம் ஒன்றிலொன்று தங்கியிருத்தல்" கோட்பாடுகளை உள்ளடக்கும் விதத்தில், பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் ஒத்துச்செல்கின்றவாறு விரிவாக்கப்பட்டிருக்கிறது. இதற்கு வங்கிகள் இதற்கிணங்கிக்கொள்வதற்கு மூன்றாண்டுகளைக் கொண்ட இடை ஏற்பாட்டுக் காலம் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானக்கப்படக்கூடியதொரு காலம் வழங்கப்பட்டிருக்கிறது.

xiv. **தொடர்பான தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள்:** பாசல் மையக் கோட்பாடுகளையும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளையும் பரிசீலனையில் கொண்டு, உரிமம்பெற்ற வங்கியொன்றின் தொடர்பான தரப்பினர்கள் எனக் கருதப்படக்கூடிய தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் விரிவாக்கப்பட்டிருப்பதுடன், பணிப்பாளர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்களுக்கும் அதேபோன்று ஏனைய தொடர்பான தரப்பினர்களுக்கும் வழங்கப்பட்ட கடன் வசதிகள் தொடர்பில் குறிப்பிட்ட ஏற்பாடுகளைப் பிரயோகிப்பதற்கான ஏற்பாடுகள் விரிவாக்கப்பட்டுள்ளன. இதற்கமைய, வங்கியின் உடமைக் கம்பனி, அவ்வுடமைக்கம்பனியின் துணைக் கம்பனிகள் அக்கம்பனிகளின் பணிப்பாளர்கள், வங்கியின் துணை மற்றும் இணைக் கம்பனியின் பணிப்பாளர்கள் மற்றும் பொதுவான பணிப்பாளர்கள் ஆகியோர் தொடர்பான தரப்பினர் என அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

xv. **கம்பனி ஆளுகை**: பொதுவாக, கம்பனி ஆளுகை அதிகார ஒதுக்கீட்டையும் பொறுப்புக்களையும் தீர்மானிக்கின்றது. இதன்மூலமே வங்கியின் வியாபாரமும் அலுவல்களும் அதன் சபையினாலும் மூத்த முகாமைத்துவத்தினராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கம்பனி ஆளுகையில் காணப்படும் சிறந்த நடைமுறைகள் வங்கித்தொழில் துறையினதும் முழுப்பொருளாதாரத்தினதும் காத்திரமான செயற்பாடுகளுக்கு மிகவும் இன்றியமையாததாகும். இதற்கமைய, தகைமைகள், பொருத்தம் மற்றும் தகுதி மதிப்பீடுகள் மற்றும் சபைப் பொறுப்புக்கள் என்பனவற்றிற்கான வலுப்படுத்தப்பட்ட தேவைப்பாடுகள் திருத்தங்களாக, அறிமுகப்படுத்தப்பட்டன. கம்பனி ஆளுகை தொடர்பான வங்கித்தொழில் சட்டத்திற்கான முக்கிய திருத்தங்கள் பின்வருமாறு;

- கம்பனி ஆளுகை மீதான வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகள் எழுதப்பட்ட ஏதேனும் சட்டங்களைவிட மேலோங்கி நிற்றல் வேண்டும்.
- பணிப்பாளரொருவரை நியமிப்பதற்கு முன்னர் பொருத்தம் மற்றும் தகுதிக்கான மதிப்பீடுகளுக்கான தகவல்களை வழங்குதல் வேண்டும்.
- கல்விசார்/ தொழில்சார்ந்த தகைமைகளைக் கொண்டிருப்பது அவசியமென்பதுடன் (தற்பொழுது "அல்லது") வங்கித்தொழில், நிதி, பொருளாதாரம், கணக்கீடு, வியாபார நிருவாகம், தகவல் தொழில்நுட்பம், இடர்நேர்வு முகாமைத்துவம், சட்டம் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும்

1. ஐந்தொகையிலான மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான கடன்கள், மேலதிகப்பற்றுக்கள், முற்பணங்கள் அல்லது கடன்களை வழங்குவதற்கான ஏதேனும் கடப்பாடுகள் மற்றும் அனைத்துப் படுகடன்கள் மற்றும் பங்குரிமை முதலீடுகள் உட்பட, ஆனால் அவற்றிற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படாத கொடுகடன் வசதிகள் உட்பட, நிதியியல் துணை நிறுவனங்களிலுள்ள பங்குரிமை முதலீடுகள் நீங்கலாக.

இயைபான துறையில் காத்திரமான அனுபவத்தினைக் கொண்டிருக்க வேண்டிய அதேவேளையில் "நிருவாகம்" பொதுவான வகையான துறையாக இருப்பதனால் அது நீக்கப்பட்டிருக்கின்றது.

- பணிப்பாளர்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்/முக்கிய முகாமைத்துவ அலுவலர்கள் அத்தகைய ஆள், இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால், நியாயசபையினால், ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையினால், மேற்பார்வை அதிகாரசபையினால், உயர்தொழில்சார் கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் குழுவினால், மோசடி, வஞ்சனை, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியற் செயற்பாட்டை உட்படுத்துகின்ற ஒரு குற்றச்சாட்டுப் பற்றிய அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுவதன் மேல் விளைகின்ற எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்கு, விசாரணைக்கு அல்லது புலனாய்வுக்கு அமைந்தவரல்லாதவராகவும் இருத்தல் வேண்டும்.
- நியமனம், பொருத்தம் மற்றும் தகுதி வகை தொடர்பில், அவசியமானவிடத்து வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் மேலதிக விசாரணைகளை நடத்துவதற்காக கொண்டிருக்கும் உரிமை.
- உரிமம்பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களது எண்ணிக்கை இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படும் என்பதுடன் குறைந்தபட்ச எண்ணிக்கை 7 ஆகக் குறித்துரைக்கப்படும்.
- உரிமம்பெற்ற வங்கியொன்றின் முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர், வங்கித்தொழில் சட்டத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பிரமாணங்களுக்கிணங்க இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு தொடர்பான பதவிகளுக்கு பொருத்தமும் தகுதியுமான ஆட்களாக இருத்தல் வேண்டும்.
- பணிப்பாளர்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்/முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் குறிப்பிட்ட காலப்பகுதியில் அவர் தொடர்பான பதவியில் பணியாற்றுகையில் மோசடி, ஏமாற்று, நேர்மையீனம் அல்லது இதனையொத்த குற்ற நடவடிக்கைகளில் அல்லது ஏனைய தவறான நடத்தைகளை இழைத்திருப்பின் அல்லது தொடர்புபட்டிருப்பின், அது, அவ்வாட்கள் பணிப்பாளராக/ முதன்மை நிறைவேற்று அலுவலகராக/ முக்கிய முகாமைத்துவ ஆளணியினராக நியமிக்கப்படுவதற்கு, தெரிவுசெய்யப்படுவதற்கு அல்லது நியமனம் செய்யப்படுவதற்கு பொருத்தமும் தகுதியுமற்ற ஆளாக்கும்.
- உரிமம்பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள் மீதான ஏற்பாடுகள் உரிமம்பெற்ற வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பு உட்பட அதன் அலுவலர்களது முகாமைத்துவத்தினை மேற்பார்வை செய்வதற்கு சபை கொண்டிருக்கும் கடமையை குறித்துரைக்கின்ற விதத்தில் விரிவாக்கப்பட்டிருப்பதுடன் இது அத்தகைய வங்கியின் வியாபாரம் அனைத்து ஏற்புடைத்தான சட்டங்களுக்கு இணங்கவும் பாதுகாப்பானதும் ஆற்றல்வாய்ந்ததுமான வங்கித்தொழில் நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் மேற்கொள்ளப்படுகிறது என்பதனை உறுதிப்படுத்துவற்கான பொறுப்பினை இறுதியாகக் கொண்டிருக்கிறது.

xvi. **கரைகடந்த வங்கித்தொழில்:** உள்நாட்டு ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் வங்கித்தொழில் வியாபாரத்தில் இடம்பெற்றுவரும் அபிவிருத்தியினை பரிசீலனையில் கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழிலுக்கும் உள்நாட்டு வங்கித்தொழிலுக்குமிடையிலான எல்லை அகற்றப்பட்டிருக்கிறது. எனினும், தற்போதுள்ள கரைகடந்த வங்கித்தொழில் அலகின் வாடிக்கையாளர்களுக்கு அவர்களது வியாபாரத்திற்கு தாக்கமெதுவுமில்லாமல் இருப்பதற்கு வசதியளிக்கும் பொருட்டு, கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவது உரிமம்பெற்ற வங்கியொன்றின் அனுமதிக்கத்தக்க நடவடிக்கையொன்றாக சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலும், கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தினை நடத்தும் நோக்கத்திற்காக வெளிநாட்டு நாணயங்களை குறித்துரைப்பதற்கு இலங்கை மத்திய வங்கியை இயலுமைப்படுத்தும் ஏற்பாடு உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

xvii. **அதிகாரமளித்தல் மற்றும் ஒடுக்கிவிடுதல்:** 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் இயற்றப்பட்டதுடன் உரிமம்பெற்ற வங்கிகள் பற்றிய தீர்மானத்திற்கான பிரத்தியேக அதிகாரசபையாக இலங்கை மத்திய வங்கி மாறியிருப்பதுடன் உரிமம்பெற்ற வங்கிகள் மத்திய வங்கியினால் முன்னெடுக்கப்படக்கூடிய வழிமுறைகள் மீதான ஏற்பாடுகளும் குறிப்பிட்ட சட்டத்தில்

உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன்படி, அதிகாரமளித்தல் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளை கட்டாயமாக ஒடுக்கிவிடுதல் தொடர்பான குறிப்பிட்ட ஏற்பாடுகள் வங்கித்தொழில் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டன. தன்னிச்சையாக ஒடுக்கிவிடுதல் மீதான ஏற்பாடுகள் தொடர்ந்துமிருக்கும்.

xviii. **நிருவாக ரீதியான குற்றப்பணம்:** ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரங்கள் வலுப்படுத்தப்படுவதனை இயலச்செய்கின்ற விதத்தில் திரவத்தன்மை, மூலதனம், பாரிய கடன் அளவுகள், பங்குச் சொத்துடமை மற்றும் நிதியியல் கூற்றுக்களை சமா்ப்பித்தல் போன்ற குறிப்பிட்ட துறைகளுக்காக நிருவாக குற்றப்பணத்தினை விதிப்பது மத்திய வங்கிக்கு சட்டமுறையானதாதல் வேண்டும். இலங்கை மத்திய வங்கி அவ்வாறு இழைக்கப்பட்ட மீறலின் விகிதாசாரத்திற்கேற்ப ஆள் ஒருவா் மீது நிருவாக ரீதியான குற்றப்பணத்தை விதிப்பதற்கும் அத்தகைய குற்றப்பணத்தின் தொகைக்கும் நடைமுறைகளைத் தீா்மானித்தல் வேண்டும்.

xix. **மூன்றாம் தரப்பு தகவல்:** இலங்கை மத்திய வங்கி, வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் அதன் அதிகாரங்கள் தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளை ஆற்றும் பொருட்டு மூன்றாம் தரப்பினரிடமிருந்து தகவல்களை சமா்ப்பிக்குமாறு கோரமுடியும்.

xx. **அமைச்சரின் அனுமதியும் ஒப்புதலும்:** அமைச்சா் பற்றி வங்கித்தொழில் சட்டத்தில் வரைவிலக்கணம் ஏதும் செய்யப்பட்டிராமையினால், அமைச்சரானவா் அரசியல் யாப்பின் உறுப்புரை 44 அல்லது 45 இன் நியதிகளுக்கமைய நிதி விடயம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற அமைச்சா் என்பவராக வரைவிலக்கணம் செய்யப்பட்டிருந்தது. புதிய திருத்தங்களின் படி புதிய வங்கித்தொழில் உரிமங்களை வழங்குவதற்கு அமைச்சரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படும் என்பதுடன் மற்றைய சந்தா்ப்பங்களில் இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதல் வழங்கமுடியும். இதற்கமைய, கிளைகளைத் திறத்தல், மூடுதல், அல்லது வேறிடத்தில் அமைத்தல் அல்லது இலங்கைக்கு வெளியே பிரதிநிதித்துவ அலுவலகமொன்றினை திறத்தல் போன்றவற்றிற்கு நிதி அமைச்சரின் ஆலோசனையுடன் இலங்கை மத்திய வங்கி ஒப்புதல் வழங்கமுடியும். மேலும், திருத்தங்களின் நியதிகளுக்கமைய, அமைச்சரின் சம்மதத்தினை அல்லது ஒப்புதலை வங்கித்தொழில் சட்டம் தேவைப்படுத்துகின்ற பின்வரும் சந்தா்ப்பங்களில், நேரடியான இறைத்தாக்கங்கள் இருக்கமாட்டாது எனக் கருதப்படுமிடத்து, தற்பொழுது இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலை வழங்கமுடியும்.

- இலங்கையின் எந்தவொரு பாகத்திலும், கிளை, முகவராண்மை அல்லது அலுவலகத்தினைத் திறத்தல், மூடிவிடுதல், வேறு இடத்தில் அமைத்தல்.
- வெளிநாட்டு வங்கி இலங்கையில் பிரதிநிதித்துவ அலுவலகத்தினைத் திறத்தல்.
- வங்கிகளின் கையேற்றல் மற்றும் இணைத்தல்.
- உரிமம்பெற்ற வா்த்தக வங்கியொன்றிலுள்ள முக்கிய அக்கறைகளைக் கையேற்றல்.
- இலங்கையில் வங்கித்தொழில் வியாபாரத்தினை நடத்தும் நோக்குடன் வெளிநாட்டு வங்கியொன்றின் கிளையினால் அனுப்படவேண்டிய ஒதுக்கப்பட்ட மூலதனத் தொகையினை தீா்மானித்தல்.
- உரிமம்பெற்ற வங்கிகளுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளை தீா்மானித்தல்.
- கரைகடந்த வங்கித்தொழில் நடவடிக்கைகளை நடத்துவதற்கான வெளிநாட்டு நாணயங்களை குறித்துரைத்தல்.

**முடிவுரை**

இலங்கை மத்திய வங்கி, கம்பனி ஆளுகை, தொடா்பான தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள், கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம், திரவத்தன்மைத் தேவைப்பாடுகள் போன்ற துறைகளில் வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம், காத்திரமான விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் வங்கித்தொழில் துறைக்குத் தேவையான ஒழுங்குவிதிகளை வழங்கியிருக்கிறது. வங்கித்தொழில் சட்டத்திற்கான திருத்தங்கள் நடைமுறைப்படுத்துவதன் காரணமாக, உரிமம்பெற்ற வங்கிகள் தொடா்பான ஒழுங்குபடுத்தல்களும் மேற்பார்வையும் மேலும் வலுப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வங்கித்தொழில் சட்டம் மற்றும் அதன் கீழ் விடுக்கப்பட்ட வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் என்பவற்றின் நியதிகளுக்கமைய, உரிமம்பெற்ற வங்கிகளின் கம்பனி ஆளுகையில் சிறந்த நடைமுறைகள் நிறுவப்படும் என்பதுடன் தேவையான தகைமைகளும் அனுபவமுடைய ஆட்கள் உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளா்களாக/முதன்மை நிறைவேற்று அலுவலா்களாக மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராக நியமிக்கப்படுவா். மேலும், இத்திருத்தங்கள் வங்கித்தொழில் வியாபாரத்தினை சுமுகமாக நடத்துவதற்கு வசதியளிக்கும் என்பதுடன் அதன்மூலம் இலங்கையில் வங்கித்தொழில் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையும் உறுதிப்பாடும் உறுதிப்படுத்தப்படும்.

(மூலம்: திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் மற்றும் 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம்)

# விதிகளுக்கேற்ப செயற்படுதல்: இறைசார் நிலைபெறுதன்மைக்கான எண்ணியல்சார் விதிகள்




**முனைவர். எஸ் பி வை டபிள்யு சேனாதீர**
பிரதிப் பணிப்பாளர்
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

**1. இறைசார் விதிகள் என்றால் என்ன?**

இறைசார் விதிகள் என்பது செலவினம், படுகடன் மற்றும் அரசிறை போன்ற இறைக் கூட்டுகளின் மீது எண்ணியல் சார்ந்த வரையறைகளை விதிப்பதன் மூலம் இறைக் கொள்கைகள் மீது விதிக்கப்படுகின்ற நீண்டகால கட்டுப்பாடுகளாகும் (புதினாவும் மற்றையவர்களும், 2013).[1] இவ்விதிகள், இறை ஒழுங்குகளை பேணிப் பாதுகாத்தல், படுகடன் நிலைபெறுதன்மையினை உறுதிப்படுத்தல் மற்றும் அரச நிதியியல் முகாமைத்துவத்தின் மீது நம்பகத்தன்மையினை கட்டியெழுப்புதல் என்பனவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளன (கொப்பிட்ஸ் மற்றும் சிமான்ஸ்கை, 1998). கடந்த மூன்று தசாப்த காலப்பகுதியில், இவ்விதிகளை கடைப்பிடிப்பதில் முன்னேற்றம் கண்ட நாடுகள் முன்னோடிகளாகவிருந்து வருகின்றமையுடன் அளவுக்கதிகமான இறைசார் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக இறைசார் விதிகள் பரந்தளவிற்கு கட்டுப்படுத்தப்படுகின்ற கொள்கைக் கருவிகளாக மாறியிருக்கின்றன. பன்னாட்டு நாணய நிதியத்தின் இறைசார் விதிகள் தரவுத் தொகுப்பு (1985-2021), 1990 களின் ஆரம்பம் வரை ஒரு சில நாடுகள் மட்டுமே இறைசார் விதிகளைப் பின்பற்றினவென்றும் அதன்பின்னர் முன்னேற்றங்கண்ட நாடுகளைத் தொடர்ந்து அநேக தோற்றம்பெற்று வருகின்ற நாடுகளும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் இறைசார் விதிகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கின எனவும் குறிப்பிடுகிறது. 1990களில் இறைசார் விதிகளைப் பின்பற்றுகின்ற நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்தமைக்கு ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் நாடுகளின் தூண்டுதல் காரணமாயமைந்த வேளையில் உலகளாவிய நிதியியல் நெருக்கடிக் காலத்தில் பொதுப் படுகடனின் ஏற்பட்ட திடீர் அலை உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் தோற்றம் காரணமாக உலகம் முழுவதிலும் இறைசார் விதிகள் பின்பற்றப்படுவதனை அதிகரித்தது. இதன்படி 2021 அளவில் 105 நாடுகள் இறைசார் விதிகளைப் பின்பற்றின.

கோட்பாட்டு ரீதியில், கொள்கைவகுப்போர் பொருளாதார சரிவுகள் காணப்படும் காலப்பகுதியில் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைக்கும் பொருளாதார செழிப்புக் காலப்பகுதியில் வரவுசெலவுத் திட்ட மிகைக்கும் திரும்புகின்ற விதத்தில் எதிர்த்திசைக்கு சுழலுகின்ற இறைக்கொள்கையைப் பின்பற்றுதல் வேண்டும். எவ்வாறெனினும், நடைமுறையில் மந்த காலங்கள் அதேபோன்று வியாபாரச் சுழற்சி


1. இறை விதிகள் இறைக் கூட்டுக்கள் மீதான எண்ணியல்சார்ந்த விதிகளின் வடிவில் அல்லது வரவுசெலவுத் திட்டச் செய்முறையின் மீதான நடைமுறைப்படுத்தல் விதிகளாக இருக்கக்கூடும். இந்நடவடிக்கை முறை விதிகள் சிறந்த ஆளுகையினையும் நடைமுறைகளையும் நிறுவும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அநேகமான நாடுகளில் எண்ணியல் சார்ந்த மற்றும் நடவடிக்கை முறை விதிகள் இரண்டும் ஒன்றின்பின் ஒன்றாக நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன. எனினும், இக்கட்டுரை எண்ணியல் சார்ந்நத இறை விதிகள் மீது மாத்திரமே கவனம் செலுத்துகிறது.

மேல்நோக்கிச் செல்கின்ற வேளை ஆகிய இரண்டின் போதும் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையினைப் பின்பற்றவும் இப்பற்றாக்குறைகளை கடன்பாடுகளூடாக நிதியிடவுமே அரசாங்கங்கள் நாட்டம் கொள்கின்றன. கொள்கைவகுப்போர் தமது சொந்த தொகுதிகளின் நலன்கருதி செலவினத்தினை அதிகரிக்கின்ற கொள்கைகளைப் பின்பற்றுமாறு அடிக்கடி ஊக்குவித்துவருவதன் காரணமாக பொதுவாக மந்த காலத்தின் போது பெருமளவிற்கு குவிந்துபோன படுகடனை திரும்பச் செலுத்தும் விதத்தில் பொருளாதார செழிப்பின் போது வரவுசெலவுத் திட்ட மிகையினை உருவாக்க அரசாங்கங்கள் தவறிவிடுகின்றன. இது, அரச படுகடன் ஒன்றுசேர்வதற்கு வழிவகுத்து, படுகடன் நிலைபெறுதன்மைக்கு சவால்களைத் தோற்றுவிக்கின்றன. "பற்றாக்குறை பக்கச்சார்புத் தன்மை" இனை விளைவிக்கும் குறுங்கால அரசியல் சூழ்நிலைகள் இறைக்கொள்கை தொடர்பில் அரசாங்கத்தின் தற்றுணிபினைக் கட்டுப்படுத்தும் நிறுவன ரீதியான பொறிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கான நியாயப்படுத்தலை வழங்குகின்றன. எண்ணியல்சார்ந்த இறைசார் விதிகளானவை இறைசார் கூட்டுகள் மீது விதிக்கப்படும் எண்ணியல்சார்ந்த இறைக் கொள்கைப் பாதையை நிர்ணயிப்பதில் கொள்கை வகுப்பாளர்களின் தற்றுணிபைக் கட்டுப்படுத்துகின்றன.

**2. இறைசார் விதிகளின் வகைகள்**

விதிகளினால் கட்டுப்படுத்தப்படுகின்ற இறைக் கூட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு, எண்ணிக்கை சார்ந்த இறைசார் விதிகளில் நான்கு வகைகளை அடையாளம் காணமுடியும். அவையான படுகடன் விதிகள், வரவுசெலவுத் திட்ட மீதி விதிகள், செலவின விதிகள் மற்றும் அரசிறை விதிகள். பொருளாதார உறுதிப்பாடு, படுகடன் நிலைபெறுதன்மை மற்றும் அரசாங்கத்தின் பருமனை வரையறுத்தல் போன்ற வேறுபட்ட பேரண்டப் பொருளாதாரக் குறிக்கோள்களை எய்துவதற்கு தனியான இறைசார் விதிகள் சமமாகப் பொருத்தமானவையாக இருக்காது என்பதனால் அநேகமான நாடுகளும் இணைந்த இறைசார் விதிகளையே பயன்படுகின்றன. உதாரணமாக, செலவினமொன்றுடன் அல்லது கட்டமைக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட மீதி விதிகளுடன் இணைந்த படுகடன் விதிகள், படுகடன் நிலைபெறுதன்மைப் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமானவையாக இருக்கக்கூடும். இறைசார் விதிகளையும் வேறுபட்ட இணைந்த இறைசார் விதிகளையும் பின்பற்றுகின்ற நாடுகளின் எண்ணிக்கை கீழே வரைபடம் 1 மற்றும் வரைபடம் 2 இல் தரப்படுகின்றது.


**வரைபடம் 1: இறைசார் விதிகளைப் பின்பற்றுகின்ற நாடுகளின் எண்ணிக்கை - 2021**




குறிப்பு: செ.வி= செலவின விதிகள், அ.வி.=அரசிறை விதிகள், வ.நி.வி= வரவுசெலவுத் திட்ட மீதி விதிகள், ப.வி.=படுகடன் விதிகள்

*மூலம்:* இறைசார் விதிகள் தரவுத் தொகுதி 1985-2021,பன்னாட்டு நாணய நிதியம்

**வரைபடம் 2: வேறுபட்ட இணைந்த இறைசார் விதிகளைப் பின்பற்றுகின்ற நாடுகளின் எண்ணிக்கை**




**குறிப்பு: செ.வி= செலவின விதிகள், அ.வி.=அரசிறை விதிகள், வ.மீ.வி= வரவுசெலவுத் திட்ட மீதி விதிகள், ப.வி.=படுகடன் விதிகள்**

*மூலம்:* இறைசார் விதிகள் தரவுத் தொகுதி 1985-2021,பன்னாட்டு நாணய நிதியம்

**(அ) வரவுசெலவுத் திட்ட மீதி விதிகள்:** வரவுசெலவுத் திட்ட மீதி விதிகள் என்பது, ஒட்டுமொத்த வரவுசெலவுத் திட்ட மீதி சுழற்சி முறையில் சீராக்கப்படுகின்ற மீதி[2], அமைப்பியல் அடிப்படையிலான இறை மீதி[3] போன்ற வேறுபட்ட வரவுசெலவுத் திட்ட மீதிகளின் மீது விதிக்கப்படுகின்ற எண்ணியல் சார்ந்த வரையறைகளாகும். வரவுசெலவுத் திட்ட மீதியின் பெரும்பாலான கூறுகள் கொள்கைவகுப்போரின் கட்டுப்பாடுகளின் கீழ் இருப்பதால் அநேகமான வரவுசெலவுத் திட்ட மீதிகளைப் படுகடன் நிலைபெறுதன்மையினை உறுதிப்படுத்துவதற்கு பயன்படுத்தக்கூடியதாகவுள்ள அதேவேளையில் படுகடன் விகிதத்தின் பரிணாம விகிதத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு கொள்கைவகுப்போருக்கு தொழிற்பாட்டு வழிகாட்டல்களையும் வழங்குகிறது. வட்டிச் செலவினம் கொள்கைவகுப்போரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகவிருந்து வருகின்றமைக்கிடையிலும், பாரிய வட்டிச் செலவினம் படுகடன் திரட்சியை ஏற்படுத்தக்கூடும் என்பதனால் முக்கியமான மீதி இலக்கினை மாத்திரம் கடைப்பிடிப்பது படுகடன் நிலைபெறுதன்மை இலக்குகளை எய்தும் காத்திரமான தன்மையினை பலவீனப்படுத்தக்கூடும். ஒட்டுமொத்த வரவுசெலவுத் திட்ட மீதி விதி பரந்தளவிற்கு விளங்கிக்கொள்ளப்பட்டு இலகுவாக தொடர்பூட்டப்படக்கூடியதாக இருக்கின்ற போதும், அது, குறைந்தளவு பொருளாதார நிலைபெறுதன்மைப் பண்புகளைக் கொண்டிருப்பதன் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான படுகடன் விகிதத்தினைக் குறைப்பதற்கு உதவிக்கரமாக அமையாது. மறுபுறத்தில், சுழற்சி ரீதியாகச் சீராக்கப்பட்ட மீதி, அமைப்பியல் மீதி மற்றும் வியாபாரச் சுழற்சி விதிகளைவிடவும் சராசரி இறைசார் மீதி வியாபார சுழற்சியின் தாக்கத்திற்கு வெளிப்படையாகவே வகை கூறுகின்றது. எனினும், இவ்வியாபார சுழற்சியின் தாக்கத்தினை மதிப்பிடுவது, குறிப்பாக, வெளியீட்டின் இடைவெளியினை மதிப்பிடுவது சவால்மிக்க பணியாக அமைவதுடன் இதன் காரணமாக இவ்விதிகளை இலகுவாக தொடர்பூட்டவோ அல்லது கண்காணிக்கவோ முடிவதில்லை. மேலும், வியாபாரச் சுழற்சி விதி தொடர்பான சராசரி இறை மீதியின் கீழ் கொள்கை வகுப்போர் வியாபார சுழற்சியின் இறுதிப்பகுதியில் தேவைப்படுத்தப்பட்ட கொள்கைச் சீராக்கங்களின் நடைமுறைப்படுத்தலை பிற்போடுவதற்கு விருப்பம் கொள்ளக்கூடும் என்பதனால் அது துணை மேன்மைத்தன்மைப் பெறுபேறுகளை விளைவிக்கின்றது. (புதினாவும் மற்றையவர்களும், 2013). 2021 இறுதியளவில் இந்தோனேசியா, இஸ்ரேல், அவுஸ்ரேலியா, நியுசிலாந்து, யப்பான், ஐக்கிய இராச்சியம், இந்தியா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட 93 நாடுகள் வரவுசெலவுத் திட்ட மீதி விதிகளைப் பயன்படுத்தியிருக்கின்றன.

---

2. பொருளாதாரம் முழு இயலாற்றலுடன் தொழிற்பட்டிருக்குமாயின் (அதாவது மொ.உ.உற்பத்தி சாத்தியமான மொ.உ.உற்பத்திக்கு சமமாக இருக்கும் போது) பதிவுசெய்யப்பட்டிருக்கக்கூடிய வரவுசெலவுத் திட்ட மீதி சுழற்சி முறையில் சீராக்கப்பட்ட நிலுவை என அழைக்கப்படுகிறது.

3. அமைப்பியல் அடிப்படையிலான இறை மீதியானது, ஒரே தடவையிலான நிகழ்விற்குக் காரணமாக இருக்கக்கூடிய தாக்கத்திற்காக வருமானம் மற்றும் செலவினம் இரண்டினையும் மற்றும் பொருளாதார சுழற்சியையும் சீராக்கிய பின்னர் வருமானத்திலிருந்து செலவினைக் கழிப்பதன் மூலம் மதிப்பிடப்படுகிறது.

**(ஆ) படுகடன் விதிகள்:** இவ்விதிகளின் கீழ், ஒரு திட்டவட்டமான எண்ணியல்சார்ந்த வரையறை அல்லது இலக்கு அரச/ பொதுப்படுகடன் மீது விதிக்கப்பட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக விளக்கப்படுகிறது. படுகடன் விதிகள் பொதுவாகவே விளங்கிக்கொள்ளவும் ஆர்வலர்களுக்கு தொடர்பூட்டவும் இலகுவாகவும் உள்ளன. அவை படுகடன் நிலைபெறுதன்மைவாய்ந்த மட்டமொன்றிற்குள் சங்கமிப்பதை உறுதிப்படுத்துவதில் காத்திரமான தன்மையினைக் கொண்டுள்ளன. எனினும், படுகடன் வட்டிவீத மற்றும் செலாவணி வீத அசைவுகள் போன்ற அரசின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வெளிப்புறக் காரணிகளினால் பாதிக்கப்படக்கூடியதாக இருப்பதுடன் இறைசார் விதியினை கடைப்பிடிப்பதற்கு யதார்த்தமற்ற கொள்கைச் சீராக்கங்களை தேவைப்படுத்துகின்றன. மேலும், இறைக் கொள்கைச் சீராக்கங்கள் காலம்கடந்த விதத்தில் படுகடன் மட்டங்களைப் பாதிக்கும் என்பதனால் படுகடன் விதிகள் கொள்கை வகுப்போருக்கு, விசேடமாக படுகடன் மட்டங்கள் உச்சமட்டத்திற்கு மிகக்கீழே இருக்கும் போது தனித்துவமான மற்றும் குறுங்கால வழிகாட்டல்களை பிணிக்கின்றதுமான வழிகாட்டல்களை வழங்கமுடியாது. மறுபுறத்தில், படுகடன் உச்ச மட்டத்திற்கு நகர்ந்து விதிகள் கட்டுப்படுத்தத்தக்கதாக மாறும்பொழுது, படுகடன் விதிகள் முன்கூட்டியே சுழற்சி இறைக்கொள்கையில் குறிப்பாக, பொருளாதாரம், பொருளாதார அதிர்வுகளினால் பாதிக்கப்படும் போது தாக்கத்தினை ஏற்படுத்தும் (புதினாவும் மற்றையவர்களும், 2013). 2021 இறுதியளவில் படுகடன் விதிகள் இந்தியா, நெதர்லாந்து, போர்த்துக்கல், ஐக்கிய இராச்சியம், வியட்நாம் மற்றும் இந்தோனேசியா உட்பட 85 நாடுகளில் நடைமுறையிலிருந்தன.

**இ) செலவின விதிகள்:** இவ்விதிகள் அரசாங்கத்தின் மொத்த, ஆரம்ப அல்லது நடைமுறை செலவினத்தின் மீது ஒன்றில் உண்மை நியதிகளில் அல்லது வளர்ச்சி வீதங்கள் மீது அல்லது மிக அரிதாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக விதிக்கப்படுகின்றன. செலவினங்கள் மீதான உச்ச வரையறைகள் விளங்கிக்கொள்வதற்கு குறைவான சிக்கல்களைக் கொண்டனவாகவும், சுலபமாக கண்காணிக்கக்கூடியனவாகவும், செலவினங்கள் மீதான கட்டுப்பாடுகளூடாக அரசாங்கத்தின் பருமனைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தக்கூடியதாகவும் இருக்கிறது. வரவுசெலவுத் திட்ட மீதி விதிகள் மற்றும் படுகடன் விதிகளைப் போலன்றி, செலவின விதிகள் அரசிறையின் மீது எந்தவொரு வரையறையினையும் விதிக்காமையினால் அவை படுகடன் நிலைபெறுதன்மை குறிக்கோளுடன் நேரடியாக இணைக்கப்படவில்லை. செலவின விதிகள் குறிப்பாக, வரி குறைப்புக்களிலிருந்து அல்லது முறைமையியல் சார்ந்த அதீத நம்பிக்கைவாய்ந்த எறிவுகளிலிருந்து, தோன்றுகின்ற பாரிய பற்றாக்குறைகள் தொடர்பான பக்கச்சார்பான தன்மையினைக் கட்டுப்படுத்தவேண்டிய அவசியமில்லை (சான்செஷ்சும் மற்றையவர்களும் 2003). எனினும், படுகடன் அல்லது வரவுசெலவுத் திட்ட மீதி விதிகளுடன் சேர்த்துப் பயன்படுத்தும் போது செலவின விதிகள் படுகடன் நிலைபெறுதன்மைவாய்ந்த இலக்குகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் இறைத்திரட்சியை பொருத்தமான விதத்தில் மேற்கொள்வதற்கு பெறுமதிமிக்க கருவியொன்றாக விளங்கும்.

மேலும், செலவின விதிகள் எதிர்த்திசைக்கு சுழலும் இறைக் கொள்கையினை அனுமதிப்பதன் காரணமாக பொருளாதார நிலைபெறுதன்மைக்கும் பங்களிக்கின்றது. குறிப்பாக, எதிர்பாராத அதிஸ்டம்வாய்ந்த அரசிறை பெறுகைகளின் காரணமாக தற்காலிக அரசிறை மிகை காணப்படும் காலப்பகுதியில் செலவின விதிகள் மிகையான இறைசார் செலவுகளை மட்டுப்படுத்தக்கூடும். மாறாக, குறைந்த அரசிறைச் சேகரிப்புக்களுக்கிடையிலும் பொருளாதார அதிர்வுக் காலப்பகுதியில் செலவின விதிகளினால் சுழற்சிக்கெதிரான இறைக் கொள்கைகளைக் கட்டுப்படுத்தமுடியாமல் போகக்கூடும். தொழிலின்மைக்கு கிடைக்கும் பயன்கள் போன்ற வியாபார சுழற்சிக்கு உணர்திறனைக் காட்டும் செலவினம் நீக்கப்படுவதன் மூலம் விதி வடிவமைக்கப்பட்டிருக்குமாயின், செலவின விதிகளின் எதிர் சுழற்சித்தன்மை கூடியளவிற்கு ஆழமானதாக இருக்கக்கூடும் (புதினாவும் மற்றையவர்களும், 2013). எனினும், செலவின விதிகளின் எதிர்ச்சுழற்சித் தன்மையினை படுகடன் நிலைபெறுதன்மை குறிக்கோளை தியாகம் செய்தேபெறவேண்டியிருக்கும். 2021 இறுதியளவில் ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்ரேலியா, பிரான்ஸ், பின்லாந்து, நெதர்லாந்து, போத்துக்கல், ரஸ்யா, சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற 55 நாடுகள் செலவின விதிகளைப் பின்பற்றின.

**ஈ) அரசிறை விதிகள்:** இவ்விதிகள், அரசிறைச் சேகரிப்புக்களை மேம்படுத்தும் நோக்குடன் (அல்லது வரிசெலுத்துவோரின் சுமையைக் குறைக்கும்) அல்லது எதிர்பாராத அரசிறைச் சேகரிப்புக்களை தீர்மானிப்பதன் மூலம் அரசிறையின் கீழ் மட்டமொன்றாக (அல்லது உச்ச வரையறையாக) இவ்விதிகளை விதிக்க முடியும். பொதுவாக, அரசிறைச் சேகரிப்புக்களின் முன்கூட்டிய சுழற்சித்தன்மையின் காரணமாக எதிர்பாராத விதத்தில் அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்புக்களைப் பயன்படுத்துவதன் மீது விதிக்கப்படும் வரையறை இல்லாமல் அரசிறை

இலக்குகளை நிறுவிக்கொள்வது சவால்மிக்கதாக இருக்கும். மேலும், அரசிறை விதிகள் அரசாங்கத்தின் செலவிடல்களைக் கட்டுப்படுத்துவதில்லையாகையால் படுகடன் நிலைபெறுதன்மை நியதிகளில் காத்திரமானவைகளாகக் காணப்படுவதில்லை. மேலும், வியாபாரச் சுழற்சி தொடர்பில் தன்னியக்கமாக இடம்பெறும் சமநிலைப்படுத்தல்களின் தாக்கத்தில் இவ்விதிகள் எவ்விதமான வகைகூறல்களையும் கொண்டிராதமையினால் தனியாகப் பயன்படுத்தும் போது அரசிறை உச்ச எல்லை அல்லது கீழ் மட்டம் இறைக்கொள்கையின் முன்கூட்டிய சுழற்சித்தன்மையினை கண்டறியமுடிவதில்லை. இருப்பினும்கூட, செலவின விதிகளைப் போன்று அரசிறை விதிகளையும் குறிப்பாக எதிர்பாராத அரசிறை அதிகரிப்புக்களைப் பயன்படுத்துவதன் மீது வரையறைகளை விதிக்கும் போது அரசாங்கத்தின் பருமனை வரையறுப்பதற்கு இதனை பயன்படுத்தமுடியும் (புதினாவும் மற்றையவர்களும், 2013). அரசிறை விதிகள் குறைந்தளவு பிரபல்யத்தன்மையினையே கொண்டிருப்பதுடன் 2021 இறுதியளவில் 17 நாடுகளினால் மட்டுமே பயன்படுத்தப்பட்டன. அவுஸ்ரேலியா, பிரான்ஸ், ஈரான், கென்யா, நெதர்லாந்து மற்றும் வியட்நாம் போன்ற நாடுகள் அரசிறை விதிகளைப் பயன்படுத்தி வருகின்றன.

### 3. இறைசார் நிலைபெறுதன்மையினை மேம்படுத்துவதில் இறைசார் விதிகளின் காத்திரமான தன்மை

இறைசார் விதிகளைக் கடைப்பிடிப்பது பொருளாதார மொன்றிற்கு எண்ணிறைந்த நன்மைகளைக் கொண்டுவரும் என்பதுடன் விதிகளின் பொருத்தமான வடிவமைப்பு மற்றும் நெகிழ்ச்சித்தன்மையூடாக சிறந்த பேரண்டப் பொருளாதார பெறுபேறுகளும் விளைகின்றன. வலுவான இறைசார் செயலாற்றத்தினை, அதாவது செலவின விதிகளின் பிரசன்னத்துடன் இணைந்த விதத்தில் உயர்ந்த ஆரம்ப மீதியினைக் காட்டும் செயலாற்றத்தினை அர்டனாசும் மற்றையவர்களும் எடுத்துக்காட்டுகின்றனர் (2021). அதேவேளை, உயர்ந்த இறை மீதிகளைக் கொண்டிருப்பதற்கு நாட்டமுடைய மிகக் கடுமையான இறைசார் விதிகளைக் கொண்டுள்ள நாடுகளையும் (அதாவது சிறிய பற்றாக்குறைகள்) குறைந்த வெளியீட்டு தளம்பல்களையும் அரச பிணையங்கள் மீதான தாழ்ந்த வட்டி வீத விளைவைக் கொண்டிருப்பதற்கு முனைகின்றன என பாடிங்னரும் றொயிட்டரும் (2017) எடுத்துக்காட்டுகின்றனர். நாட்டிற்கான முறிகளின் விளைவை குறைத்துவிடுவதன் மூலமும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களின் நாட்டிற்கான படுகடன் தரமிடலை அதிகரிப்பதன் மூலமும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் சந்தையினை அணுகும் வசதியை இறைசார் விதிகள் விரிவாக்குகின்றன என்பதனை சவடோகோ (2021) கண்டறிகின்றார். இருப்பினும், இறைசார் விதிகள் இறைச் செயலாற்றத்தினை அதிகரிப்பதற்கான சர்வரோக நிவாரணியாக அமையமாட்டாது என்பதனை அர்னடாசும் மற்றையவர்களும் (2023) சுட்டிக்காட்டுகின்றனர். விதியின் வடிவமைப்பின் தரம், இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறை, பிறழ்வொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் விதிக்கு திரும்பிவிடுவதன் மீதான முன்னோக்கிய வழிகாட்டல் மற்றும் செலவிடல் உள்ளமைப்பின் மீதான தாக்கம் என்பன இறைச் செயலாற்றத்தினை மேம்படுத்துவதன் மீதான இறைசார் விதிகளின் காத்திரமான தன்மை, இறைக் கொள்கையின் எதிர் சுழற்சியின் தன்மை மற்றும் படுகடன் நிலைபெறுதன்மை என்பன இறைசார் விதிகளின் காத்திரமான தன்மையினை தீர்மானிக்கமுடியும் என அவர்கள் வாதிடுகின்றனர். விதியினை அடிப்படையாகக் கொண்ட இறைக் கொள்கைக் கட்டமைப்பின் காத்திரமான தன்மையினை அதிகரிக்கின்ற பல முக்கிய பண்புகள் கீழே ஆராய்ப்படுகின்றன.

- ***பொருளாதார அதிர்வுகளுக்கு இடமளிக்கக்கூடிய விதத்தில் விதிகளின் நெகிழ்ச்சித்தன்மை:*** கடுமையான இறைசார் விதிகள் எதிர் சுழற்சிக் கொள்கைகளுடன் பொருளாதார அதிர்வுகளுக்கு பதிலிறுப்பதிலிருந்து அரசாங்கத்தினை தடைப்படுத்தமுடியும். நன்கு வரையறை செய்யப்பட்ட தப்பிக்கொள்ளும் வாசகங்கள், இயற்கை அனர்த்தங்கள், பொருளாதார வீழ்ச்சி, அல்லது தேசிய மற்றும் பொதுமக்களுக்கான சுகாதாரப் பாதுகாப்பு போன்ற விதிவிலக்கான சூழ்நிலைகளின்போது விதியினை நிரந்தரமாக மீறாமல், இடைநிறுத்தாமல் அல்லது கைவிடாமல் இறைசார் விதிகளினால் விதிக்கப்பட்ட வரையறையினை தற்காலிகமாக மீறுவதற்கு நாடுகளை அனுமதிக்கின்றன. அத்தகைய கிளைவாசகங்கள் எதிர்பாராத கடுமையான சூழ்நிலைகளைக் கொண்ட சந்தர்ப்பமொன்றில் அரசாங்கம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றிய தெளிவான திட்டத்தினையும் அதிர்வுகளை உடனடுத்து இணங்கிக்கொள்ளும் விடயங்களுக்கு எவ்வாறு திரும்பிக்கொள்ள வேண்டும் என்பதனையும் உருவாக்கிக்கொள்ளுதல் வேண்டும். எனவே, தப்பிக்கொள்ளும் வாசங்கள் நெருக்கடியான காலங்களில் இறைசார் நம்பகத்தன்மையினை அதிகரிக்கும். கொவிட்-19 உலகளாவிய பெருந்தொற்று காலப்பகுதியில், அநேகமான நாடுகள் பொது சுகாதாரத்திற்கு தீங்கிழைக்கும் தன்மைகளை ஒழிப்பது தொடர்பான அவற்றின் செலவிடல் அதிகரிப்பிற்கு அரசாங்கத்திற்கான வசதிகளை உருவாக்குதல் மற்றும்

பொருளாதார சரிவுகளினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு உதவியளித்தல் என்பனவற்றின் பொருட்டு அவற்றின் இறைசார் விதிகளில் இணைக்கப்பட்டுள்ள தப்பிக்கொள்ளும் வாசங்களைப் பயன்படுத்துகின்றன.

- ***இறைசார் விதிகளின் சட்ட அடிப்படை:*** இறைசார் விதிகளை அரச கடன்பாடொன்றாக குறிப்பிடக்கூடியதாகவுள்ள அதேவேளையில் விதியின் பயன்பாட்டுக் காலத்தினையும் நம்பகத்தன்மையினையும், வரவுசெலவுத் திட்டச் சட்டங்களை ஒருங்கிணைத்தல், யாப்பு அல்லது பன்னாட்டு உடன்படிக்கைகள் மூலமும் விதிகளின் சட்ட அடிப்படையினை வலுப்படுத்துவதன் மூலமும் உறுதிப்படுத்தமுடியும் (அதிசிறந்த தேசிய இறைசார் விதிகளை பொறுத்தவரை).

- ***கண்காணித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்:*** அநேகமான இறைசார் விதிகளைப் பொறுத்தவரையில் விசேடமாக நடுத்தரகால இறைக் கட்டமைப்பிலுள்ள விதிகளை ஒருங்கிணைப்பதன் மூலமும் வரவுசெலவுத் திட்டத் தயாரிப்புச் செய்முறைகளின் மூலமும் இறைசார் விதிகள் தொடர்பிலான முறைசார்ந்த நடைமுறை வழிமுறைகளை பல நாடுகள் கடைப்பிடித்து வருகின்றன. அநேக சந்தர்ப்பங்களில், இறை ஆணைக்குழுக்கள்[4] போன்ற சுயாதீனமான நிறுவனங்கள் எதிர்வுகூறலின் அடிப்படையிலும் இறைசார் விதிகளுடன் அரசாங்கத்தின் நிகழ்வுக்குப் பிந்திய இணங்குவித்தலையும் உறுதிப்படுத்துவதற்கு நிறுவப்படுகின்றன. பிறழ்வு இடம்பெறும் சந்தர்ப்பத்தில் இறைசார் விதிகளுக்கு மீண்டும் திரும்புவதற்கான நடவடிக்கைகளைக் குறித்துரைக்கின்ற சரிசெய்யும் பொறிமுறைகளை அநேகமான நாடுகள் (உதாரணமாக, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், பனாமா மற்றும் பேரு) கொண்டிருக்கின்ற வேளையில் இறைசார் விதிகளினால் நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளை நாடுகள் அடைவதனால் சில நாடுகள் முன்கூட்டிய ஆயத்த நடவடிக்கைகளைக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, படுகடன் உச்ச மட்டத்தினை அணுகுவதற்கான படுகடன் மட்டமாக செயற்படுத்தப்பட்ட இறைச் சீராக்கங்களின் அளவினை சரிபார்க்கின்ற முன்கூட்டிய நடவடிக்கைகளை போலந்து கொண்டிருக்கிறது (தாவூதியும் மற்றையவர்களும் 2022). அதேவேளை இறைசார் விதிகளுடன் இணங்கிக்கொள்ளாமையினை ஊக்கமிழக்கச் செய்வதற்காக தடைகள் அல்லது குற்றப்பணம் கூட விதிக்கப்படக்கூடும் (உ-ம். ஐரோப்பிய ஒன்றியத்தில்)

## 4. இலங்கையில் இறைசார் விதிகள்


2023ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதி முகாமைத்துவப் பொறுப்பாண்மைச் சட்டத்தின் கீழ், 2003ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் பல்வேறு இறைசார் விதிகள் நடைமுறைக்கிடப்பட்டன. இதன்படி, ஒட்டுமொத்த வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையின் மீதும் அரசாங்க உத்தரவாதப்படுத்தப்பட்ட படுகடன் மீதும் வரையறைகள் விதிக்கப்பட்ட அதேவேளையில், அரசாங்கத்தின் படுகடன் இலக்கினை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் எய்த வேண்டியிருந்தது. எனினும், தொடர்பான ஆண்டுகளில் மட்டுமீறிய இறைச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதில் இவ்விதிகள் காத்திரமற்றவைகளாகக் காணப்பட்டன. அநேக சந்தர்ப்பங்களில், வரவுசெலவுத் திட்டத் தயாரித்தல், வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை மீதான வரையறை ஒப்புதல் செய்முறை அதேபோன்று வருடாந்த இறைச் செயலாற்ற மீளாய்வு என்பனவற்றின் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதம் கொண்ட வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைறையக் குறைத்தல் தொடர்ந்துவந்த அரசாங்கங்களினால் புறக்கணிக்கப்பட்டன. வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை எதிர்வுகூறல்கள் நிதி அமைச்சின் இறைசார் முகாமைத்துவ அறிக்கைகளில் வெளியிடப்பட்டதுடன் அடையப்பெற்ற வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைகள் வரைபடம் 3இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. நிதி முகாமைத்துவப் பொறுப்பாண்மைச் சட்டத்தின் கீழ் முறைசார்ந்த நடைமுறைப்படுத்தல் பொறிமுறைகள் அல்லது வலுவான பொறுப்புக்கூறல் தேவைப்பாடுகள் இல்லாமை என்பன உடனடியான எதர்விளைவுகள் ஏதுமின்றி வரவுசெலவுத் திட்ட மீதி விதிகளைப் பொருட்படுத்தாமல் விடுவதற்கு கொள்கை வகுப்போரை அனுமதித்தன. அதேவேளை, அரசினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட படுகடன் மீதான வரையறை கட்டுப்படுத்தக்கூடியதாக மாறும்பொழுது சட்டவாக்கத் திருத்தங்களினூடாக பல தடவைகள் மேல்நோக்கி திருத்தப்பட்டன. அரச படுகடன்

4. இறைசார் சபைகள் சுயாதீனமான பொது நிறுவனங்களாக இருப்பதுடன் இறைத் திட்டங்களையும் செயலாற்றத்தினையும் மதிப்பிடல் இறைசார் விதிகளுடன் இணங்கிக்கொள்வதனைக் கண்காணித்தல், பேரண்டப் பொருளாதாரம் மற்றும் வரவுசெலவுத் திட்ட எதிர்வுகூறல்களை அறிந்துகொள்ளுதல் மற்றும் புதிய இறைக் கொள்கை வழிமுறைகளை மதிப்பிடல் என்பன மூலம் நீடித்துநிலைத்திருக்கும் பொது நிதி முகாமைத்துவத்தினைப் பேணி வளர்ப்பதற்கான நியதிச் சட்ட ரீதியான பற்றுறுதியினை அல்லது நிறைவேற்றுப் பொறுப்பாணையினைக் கொண்டிருக்கின்றன (பன்னாட்டு நாணய நிதியம் 2013). இறைசார் சபை இறைசார் நிலைபெறுதன்மையினையும் வெளிப்படைத்தன்மையினையும் ஊக்குவிக்கக்கூடியதாக இருப்பதன் மூலம் கீர்த்திவாய்ந்த தன்மையினை அதிகரிப்பதுடன் விரும்பத்தகாத கொள்கை நடவடிக்கைகளின் தேர்தல் செலவுகளையும் அரசாங்கத்தின் கடப்பாடுகளையும் தவறச்செய்துவிடுகிறது (தாவூதி, 2022).

நியதிகளில், படுகடன் இலக்கும் இலக்கு எய்தப்படவேண்டிய இறுதித் திகதியும்கூட, குறித்துரைக்கப்பட்ட மைல்கல்லை அடைந்ததும் படுகடன் மட்டத்தினை இலக்கிடப்பட்ட மட்டத்திற்கு கொண்டுவராமல் ஒரு சில தடவைகள் திருத்தப்பட்டன. சட்டவாக்கத்தினூடாக இறைசார் விதிகள் விதிக்கப்பட்டமைக்கிடையிலும், இறைசார் விதிகள் கடைப்பிடிக்கப்படாமை மற்றும் இணங்கிக்கொள்ளமைக்காக பொறுப்புக்கூறும் தன்மை இல்லாமை என்பன நிலையாக வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைகளில் பிரதிபலிக்கப்பட்டன. வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளுக்கு மிக மேலே இவை காணப்பட்டதுடன் படுகடன் திரட்சி 2022 அளவில் நிலைபெறுதன்மையற்ற மட்டத்திற்கு அதிகரிக்க வழிவகுத்தது.

நிலைபெறுதன்மையற்ற படுகடன் மட்டத்திற்கும் 2022இன் பொருளாதார நெருக்கடிகளுக்கும் பதிலிறுக்கும் விதத்தில் அரசாங்கத்தின் படுகடன் சொத்துப்பட்டியல்

**வரைபடம் 3: வரவுசெலவுவுத் திட்டப் பற்றாக்குறை எதிர்வுகூறல்களும் தேறல் செய்யப்பட்ட வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைகளும்**




*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

மறுசீரமைப்பினைத் தொடரும் விதத்தில் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் இறைத் திரட்சியின் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தினையும் பொருளாதார உறுதிப்படுத்தலையும் அரசாங்கம் ஆரம்பித்தது. பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமும் படுகடன் மறுசீரமைப்பும் நிகழ்ச்சித்திட்டக் காலப்பகுதியில் இறை மற்றும் படுகடன் திரட்சியை உறுதிப்படுத்துமென எதிர்பார்க்கப்பட்டதுடன் நீண்டகாலத்தில் இறைசார் ஒழுங்குகளை உறுதிப்படுத்துவதும் மிக முக்கியமானதாகும். இதற்கமைய, பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், இறை முன்மதியுடைய தன்மையினை உறுதிப்படுத்துகின்ற அதேவேளையில் பொறுப்புக்கூறும் தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் நாட்டின் பொது நிதியியல் முகாமைத்துவத்தின் ஆளுகை என்பனவற்றை வலுப்படுத்தும் நோக்குடன், 2024 ஓகத்தில் 2024ஆம் அண்டின் 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டம் என்ற சட்டவாக்கத்தின் புதிய விதியொன்று இயற்றப்பட்டது. இந்த பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டம் ஆரம்ப செலவினம் மற்றும் அரச உத்தரவாதப்படுத்தப்பட்ட படுகடன்[5] மீதான உச்ச எல்லை நியதிகளில், இரண்டு இறைசார் விதிகள் அறிமுகப்படுத்தயுள்ளது.

ஆரம்ப செலவின விதிகள் தேவையற்ற மட்டுமீறிய இறைச் செலவினைக் கட்டுப்படுத்துவதற்கு எண்ணுகிறது. இது தற்போது இடம்பெறுகின்ற இறைத் திரட்சி முயற்சிகளுக்கு மிக முக்கியமாகும். எனினும், விதி கட்டுப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாறாத மீண்டெழும் செலவினங்களுக்கு மத்தியில், கொள்கைவகுப்போர் மூலதனச் செலவினத்தை குறைக்க முனைவதனால் நீண்ட கால பொருளாதார வளர்ச்சியை தடைசெய்யுமொன்றாக செலவின விதிகள் செயற்படக்கூடும். தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களில், செலவின விதிகள் பொதுவாக, விதிகளுடன் இணங்கிச்செல்வதை நோக்கியதாக உயர்தர தற்றுணிவு செலவிடலை பிற்போடுவதிலிருந்து கொள்கை வகுப்போரைத் தடுப்பதற்கு காத்திரமான பொது நிதி முகாமைத்துவ முறைமைகள் இல்லாதவிடத்து குறைவான மட்ட அரச முதலீட்டுடன் இணைக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது (கோடவும் மற்றையவர்களும் 2017). இருப்பினும், கடுமையான இறைசார் விதிகள், முதலீடுகள் மீதான செலவிடலின் மீது எதிர்மாறான தாக்கத்தினையே கொண்டிருக்கும் என்கின்ற போதிலும் நன்கு வரையறை செய்யப்பட்ட தப்பித்துக்கொள்வதற்கான வாசகங்கள், சுழற்சி ரீதியாக சீராக்கப்பட்ட இறை இலக்குகள், அரச முதலீட்டு செலவினத்தின் மீதான வேறுபட்ட நடைமுறைகள் போன்ற வெளியிலிருந்து தோன்றும் அதிர்வுகளை தாங்கிக்கொள்வதற்கான பொறிமுறைகளை உள்ளடக்கிய நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த இறைசார் விதிகள் அரச முதலீட்டுச் செலவினம் மீது குறைந்தபட்சத் தாக்கத்தினையே கொண்டிருக்கும் அர்டானசும் மற்றையவர்களும் (2021). பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்திலுள்ள ஆரம்ப செலவின விதிகளானவை தப்பிப்பதற்கான கிளை வாசகங்களைக் கொண்டிருப்பது பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள வரவுசெலவுத் திட்டத்திற்கு அப்பால் மேலதிக செலவினை தேவைப்படுத்தக்கூடிய இயற்கை அனர்த்தங்கள் அல்லது தேசிய பாதுகாப்பிற்கான அல்லது பொதுச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு போன்ற விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழ் விதிகளிலிருந்து விலகிச்செல்வதனை அனுமதிக்கிறது. இவ்விலகல்களுக்கான பாராளுமன்றத்தின் ஒப்புதலை அமைச்சர் பெற்றுக்கொள்ளவேண்டும் என தேவைப்படுத்துகின்றது.

பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ், பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின்[6] 13 சதவீதத்தில் ஆரம்பச் செலவின மேலெல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ள போதும், நாட்டில் தற்போது காணப்படும் தாழ்ந்த அரசிறை திரட்டலைக் கவனிக்கும் போதும் நியாயமானதாகவே காணப்படுகிறது. அயல் நாட்டுப் பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில், இம்மட்டம் மிகக் குறைவானதேயாகும். 2015 - 2023 காலப்பகுதியில், நடுத்தர வருமான மற்றும் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களில் சராசரி ஆரம்பச் செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 30 சதவீதமாகக் காணப்பட்டது. இலங்கை மொத்த உள்நாட்டு உற்பத்தியின்[7] 15 சதவீதத்திற்கு மிக மேலான உயர்ந்த அரசிறை திரட்டலை விடாப்பிடியாக எய்துவதற்காக இயலுமையினைக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், அரசாங்கம் சட்டவாக்கத் திருத்தங்களினூடாக எதிர்காலத்தில் ஆரம்ப செலவினத்தின் உச்ச எல்லையினை உயர்த்துவது பற்றி பரிசீலிக்கக்கூடியதாக இருப்பது அரசாங்கத்தின் படுகடன் குறைப்பு குறிக்கோளுக்கு பங்கமேதும் நேராமல் உயர்ந்த அரசிறை சேகரிப்புக்களிலிருந்து நன்மைகளை அடைந்து கொள்வதற்கு பொருளாதாரத்தினை அனுமதிக்கிறது.

பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் அரச உத்தரவாதங்கள்[8] மீதான உச்ச எல்லை, எதிர்பாராத பொறுப்புக்கள் ஏற்படுகின்ற இடர்நேர்வுகளை மட்டுப்படுத்துவதன் மூலம் படுகடனை நிலைபெறுதன்மையை நோக்கமாகக் கொண்டுள்ளது. பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டமானது அரசாங்கத்தின் படுகடன் குறைப்பு குறிக்கோளுக்கிணங்க, இறை உபாயக்

5. பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டம் ஆரம்ப மீதி அல்லது பொதுப்படுகடனுக்கான எண்ணியல் இறை விதிகளை குறித்துரைக்காத போதும் அண்மையில் இயற்றப்பட்ட 2024ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க பொருளாதார நிலைமாற்றல் சட்டம் ஐந்து இறை விதிகளை ஏற்படுத்தியிருக்கிறது. இதன்படி, பொருளாதார நிலைமாற்றல் சட்டம் பொதுப்படுகடனுடன் தொடர்பான இறை விதிகள் (2032 அளவிலும் அதன் பின்னரும் மொ.உ.உற்பத்தியில் 95 சதவீதம்) ஆரம்ப மீதி (2030 வரை மொ.உ.உற்பத்தியில் 2.3 சதவீதம் அதன் பின்னர் மொ.உ.உற்பத்தியில் குறைந்தபட்சம் 2 சதவீதம்) அல்லது (2027 இலிருந்து மொ.உ.உற்பத்தியில் குறைந்தபட்சம் 15 சதவீதம்) வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் (2027 அளவிலும் அதன் பின்னரும் மொ.உ.உற்பத்தியில் 4.5 சதவீதம்) என குறித்துரைக்கிறது. இவ்விதிகள் ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் நடைமுறை பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டங்களினால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக்கு சட்ட பூர்வமான அந்தஸ்தினை வழங்கின. இருப்பினும், இவ்விதிகளுடன் தொடர்பான நடைமுறைப்படுத்தல் பொறிமுறை மற்றும் பொறுப்புக்கூறும் தேவைப்பாடுகளுக்கு இச்சட்டத்தில் உரிய இடமளிக்கப்படவில்லை என்பதுடன் இவ்விதிகளின் நடைமுறைப்படுத்தல் ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஆதரவுத் திட்டத்தினை தொடர்வதனூடாக மாத்திரமே உத்தரவாதப்படுத்தக்கூடியதாக இருக்கும். ஆகவே, எதிர்பார்க்கப்பட்ட இறைக் குறிக்கோள்களை எய்துவதற்கு இவ்விதிகளை கடைப்பிடிப்பதற்கு வலுவான அரசியல் கடப்பாடுகள் மிக முக்கியமானவையாகும்.

6. ஆரம்ப செலவினத்தின் உச்ச எல்லை நிதியமைச்சின் பெயரளவு மொ.உ.உற்பத்தி மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்ட பெயரளவு நியதிகளில் தெரிவிக்கப்படும்.

7. பொருளாதார நிலைமாற்றல் சட்டத்தின் கீழ், கீழ்மட்ட அரசிறை

8. ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் வெளிநிற்கும் அரச உத்தரவாத விதிகளின் மொத்த இருப்பு, தொடர்பான நிதியியல் ஆண்டினதும் உடனடியாக முற்போந்த இரண்டு நிதியியல் ஆண்டுகளினதும் சராசரி மொ.உ.உற்பத்தியில் 7.5 சதவீத்தினை விஞ்சக்கூடாது. அரசாங்கத்தின் படுகடன் குறைப்பு குறிக்கோளுடன் இது இசைந்துசெல்கின்றதா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு ஐந்தாண்டுக்கொருமுறை இவ்வரையறை மீளாய்வு செய்யப்படும்.

கூற்றினையும் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தினையும் தயாரிப்பதன் மூலம் ஆரம்ப மீதி மற்றும் படுகடன் தொடர்பான நடைமுறைசார் விதிகளை குறித்துரைக்கிறது.

**5. முடிவுரை மற்றும் இலக்கை முன்னோக்கிப் பயணிப்பதற்கான பாதை**

அநேகமான அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகள் அரச நிதிகளை நிலைபெறத்தக்க பயணப் பாதையில் பேணுவதற்கு இறைசார் விதிகளை தழுவியிருக்கின்றன. எனினும், இறைசார் விதிகளை கடைப்பிடிப்பது சுயமாக விதிகளின் காத்திரமான தன்மைக்கு உத்தரவாதமளிக்காது, எனினும், விதிகளின் பொருத்தமான கலப்பு மற்றும் வடிவமைப்பு, சட்ட ரீதியான ஆதரவு அதேபோன்று போதுமான கண்காணிப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல் பொறிமுறை என்பன எதிர்பார்க்கப்படும் இறைக் குறிக்கோள்களை அடைவதற்கு முக்கிய திறவுகோலாக விளங்கும். பலயீனமான நடைமுறைக்கிடல் பொறிமுறை மற்றும் இணங்கிக்கொள்ளாமைக்கான பொறுப்புக்கூறல் இல்லாமை என்பனவற்றின் காரணமாக, விரும்பத்தக்க பெறுபேறுகளை விளைவிப்பதற்கு நிதி முகாமைத்துவ பொறுப்பாண்மைச் சட்டத்தின் கீழான நிதியியல் விதிகள் தவறியமையினை இலங்கை அனுபவத்தின் மூலம் எடுத்துக்காட்டுகின்றன. இலங்கையில் தொடர்ந்துவந்த மக்கள் அரசாங்கங்களின் தற்றுணிபான இறைக் கொள்கைகள் பல தசாப்தங்களாக இறை ஊதாரித்தனங்களை விளைவித்ததுடன் 2022இன் நெருக்கடியுடன் அது உச்ச நிலையினை அடைந்தது. நெருக்கடிகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில், புதிய சட்டவாக்கத்தினூடாக இறைசார் முன்மதி மற்றும் படுகடன் நிலைபெறுதன்மையினை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் பல இறைசார் விதிகளை அறிமுகப்படுத்தியிருக்கிறது. கடந்தகால அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்வதன் மூலம் இறைக் குறிக்கோள்களை எய்துவதனை உறுதிப்படுத்துவதற்காக அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட விதிகளை அடிப்படையாகக் கொண்ட இறைக் கட்டமைப்பு தொடர்பில் அரசாங்கம் வலுவான கண்காணிப்பினையும் நடைமுறைப்படுத்தல் பொறிமுறைகளையும் நிறுவுவது அவசியமாகும். இது தொடர்பில், குறிப்பாக எதிர்வுகூறலின் அடிப்படையிலும் வரவுசெலவுத் திட்டத்திற்கு பின்பு இறைசார் விதிகளுடன் இணங்குவிப்புக்களை கண்காணிப்பதற்காக இறைச் சபையினை நிறுவுவது பயன்மிக்கதாக இருக்கும். அதேவேளை, வரவுசெலவுத் திட்ட ஒதுக்குகள் விசேடமாக மூலதன செயற்றிட்டங்கள் மீதான குறைந்த செலவிடல் காரணமாக வளர்ச்சியைத் தடுக்காத விதத்தில், ஆரம்ப செலவினத்தின் மீதான இறைசார் விதிகளை உறுதிப்படுத்தவதற்கு ஏற்ற விதத்தில் கவனமாக திட்டமிடப்படல் வேண்டும். மேலும், தற்போதைய நடைமுறை இறைத்திரட்சி தூண்டலுடன் முன்னேறுவது, எதிர்வரும் காலத்தில் பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் இறைசார் விதிகளுடன் இணங்கிச்செல்வது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

**உசாத்துணை:**


Ardanaz, M., Cavallo, E. & Izquierdo, A., 2023. Challenges and Reform Opportunities for Emerging Markets. IDB Working Paper Series, IDB-WP-1443.

Ardanaz, M., Cavallo, E., Izquierdo, A. & Puig, J., 2021. Growth-friendly fiscal rules? Safeguarding public investment from budget cuts through fiscal rule design. Journal of International Money and Finance, 111(C), pp. 1-17.

Badinger, H. & Reuter, W., 2017. The case for fiscal rules. Economic Modelling, 60(C), p. 334–343.

Budina, N., Kinda, T., Schaechter, A. & Weber, A., 2013. Chapter 3: Numerical Fiscal Rules: International Trends. In: M. Cangiano, T. Curristine & M. Lazare, eds. Public Financial Management and Its Emerging Architecture. Washington, D.C.: International Monetary Fund, pp. 107-135.

Cordes, T., Kinda, T. & Muthoora, P., 2017. Chapter 12 Expenditure Rules: Effective Tools for Sound Fiscal Policy?. In: V. Gaspar, S. Gupta & M. Carlos, eds. Fiscal Politics. Washington D C: International Monetary Fund, 2017, pp. 299-325.

Davoodi, H, Elger, P., Fotiou, A., Garcia-Macia, D., Han, X., Lagerborg, A., Lam, W. R., & Paulo, M., 2022. Fiscal Rules and Fiscal Councils: Recent Trends and Performance during the COVID-19 Pandemic. IMF Working Paper, Volume WP/22/11.

International Monetary Fund, 2013. The Functions and Impact of Fiscal Councils”. July 2013(063).

Kopits, G. & Symansky, S., 1998. Fiscal Rules. IMF Occasional Paper No. 162.

Sanchez, T.D., Symansky, S.A., Milesi-Ferretti, G.M., Detragiache, E. & Bella, G.D., 2003. Rules-Based Fiscal Policy in France, Germany, Italy, and Spain. IMF Occasional Papers 2003/009.

Sawadogo, P., 2020. Can fiscal rules improve financial market access for developing countries?. Journal of Macroeconomics, 65(C).